Registered at The G. P. O Colombo As A Newspaper.

திராவிடன்

THE DRAVIDAN.

A Monthly Newspaper.

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி."

பதிவுபெற்ற பத்திரிகையாகப்.

KACHCHERI 10 AUG 1929

சந்தா விளம்பரம்.

தபாற்செலவின்றி வருஷம்ஒன்றுக்கு ரூ. 1-00
தபாற்செலவு உட்பட ,, ,, ரூ. 1-25
மலாய்நாட்டிற்கு ,, ,, ரூ. 2-50
வி. பி. சார்ஜ் பிரதியேகம்
தனிப்பிரதி 10 சதம்.
முற்பணமாகவே அனுப்பவேண்டியது.

விளம்பர விகிதம்.

1 கலம் முதன்முறை	ரூ. 4 50
¾ ,, ,,	ரூ. 3 00
½ ,, ,,	ரூ. 2 50
¼ ,, ,,	ரூ. 1 50

அடுத்தமுறைகளில் ½ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை முற்காசு கட்டவேண்டும்.

புத்தகம்—3. { யாழ்ப்பாணம்-சுன்னாகம்:-சுக்கிலவரு ஆனிமீ கரு (1929 ஜூன் 23) ஞாயிற்றுக்கிழமை. } இலக்கம்—2.

உ

கடவுள்துணை.

அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளோடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்
யகிலாண்டகோடியெல்லாந் [குளே
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிரரய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமலின்றதெதுசமயகோடிகளே
தந்தெய்வமெந்தெய்வமென்று [லாந்
எங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்கா
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குழள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்துக்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவும்
கருதியஞ்சலிசெய்குவாம்.

மதுபரிபாலன அறிக்கை.

மதுபரிபாலன உத்தியோகத்தர் மதுபான விஷயமாக 1928-ம் ஆண்டிற்கு எழுதிய அறிக்கைப்பத்திரம் வெளியாகிவிட்டது. 1918-ம் ஆண்டிலும் பார்க்க 1927-ம் ஆண்டில் கள்ளு அதிகரித்துவிட்டதெனறும் 1928-ம் ஆண்டில் 1000000 கலன் கள்ளு சேரமாகச் சேர்த்துக் குடிக்கப்பட்டதென்றும் தமது அறிக்கைப்பத்திர உத்தியோகத்தர் வெளியிட்டிருக்கின்றார். பழையபடி மதுபானத்தை இங்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்னும் விருப்பமே இங்குள்ள மதுபானிகளிடத்தும் மரமேறிகளிடத்தும் மதுபான வியாபாரிகளிடத்தம் குடிகொண்டிருக்கும் பெரு நோக்காகும். இவர்களின் விருப்புக்கிசையவே உத்தியோகத்தர்களின் குறிப்பும் அறியக் கிடக்கின்றது. மதுபானத்தை எப்படியும் ஒழிக்க வேண்டுமேயானால் அரசினரால் முடியாததனவல்ல. கஞ்சா விஷயத்தில் எவ்வித சட்ட மேற்படுத்தி யிருக்கின்றனரோ; அதுபோலவே மதுபானத்திற்கு மரம் கொடுக்கும் சொந்தக்காரருக்கும் பிரமாணம் விதித்தல் வேண்டும் என்னும் கருத்துடனே சனப்பிரதிநிதிகள் சட்டநிருபணசபைக் கூட்டங்களில் வாதிட்டிருக்கின்றனர். இவைகளை நன்கு ஆராயுமிடத்து மதுவிலக்கும் அபிமானிகளோடு அதிகாரிகளும் ஒத்துழைத்தாலன்றி இங்கே மதுபானத்தை அகற்றல் முடியாத காரியம்.

பிடிபட்ட கள்வன்.

சென்ற சில மாதங்களாக இடைவிடையே யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலு மிருக்கும் சைவக் கோயில்களில் பெரும் களவுகள் நடந்துவந்தன பெரும்பாலும் கோயிலுக்குளிருக்கும் இயந்திரத்தகட்டையே களவாடி வந்தனர்; இவ்விதசெயலைப் புரிந்துவந்த கள்வரைப் பிடிப்பதற்காக அரசினரும் கோயிற் சொந்தக்காரரும் பெரும் பிரயாசையெடுத்து வந்தனர். ஈற்றில் சென்றமாசம் கல்லூர்க் கந்தசுவாமிகோயில் வெளிவீதியிலிருந்த உண்டியல்பெட்டிக்குக் கள்ளச்சாவிகொண்டு திறந்து பணத்தைத் திருடிய கள்வன் ஒருவன் பிடிபட்டு இப்பவும் சிறைச்சாலையி லிருக்கின்றான். இவன் நீதிஸ் தலத்தில் நீதிபதிமுன் தன் பெயர் கந்தையாவென்றும் பின் சுப்பிரமணியமென்றும் மாற்றிக் கூறியிருக்கின்றனனும். பின்னரும் வழக்குத் தவணையிடப்பட்டிருக்கின்றது.

கோயில்களில் பெருங் கொலை.

இம்மாதத்தில் நம் நாட்டுக் கோயில்களில் நடந்தேறிய வேள்விகளில் வெட்டுண்டிறந்த கோழிச்சேவல்களுக்கும் ஆட்டுக்கடாக்களுக்கும் ஒரு கணக்குண்டா! இப்பெருங் கொலைகளைத் தெய்வத்தின் பேரைச்சொல்லி அச்சந்நிதானத்தில் ஈகை இரக்கமென்பது ஏட்டுணையுமின்றி அச்சீவராசிகளைத் துடிக்கப் பதற வெட்டிக் குவிக்கின்றனரே அங்கு ஓடும் இரத்தப்பிரவாகம் எவர் மனத்தையும் நடுநடுங்கச் செய்யும். இத்தகைய பெருங் கொலைகள் இவர்கள் ஏனோ புரிகின்றனரெனில்; சிலர் கூறும் சமாதானம் வியாபாரத்திற்காம் எப்படியெனில் உயிரோடு விற்கும் விலையைக் காட்டிலும் வெட்டியபின் கூடிய விலைக்கு விற்றலாகுமாம் இன்னும் இதுபோன்ற எத்தனையோ சமாதானங்களைப் புகிப்பவர்கள் கூறுகின்றனர். எளியவர்களே இக்கீழான செய்கையைப் புரிந்து வந்தனரென அறிவுடையோர் கூறுவர். இங்கு எத்தனையோ கோயில்களின் தர்மகத்தாக்கள் பெரியவர்களாகவே இருக்கின்றனர். அங்கும் இப் பெருங் கொலைப் பாதகங்கள் வருஷந்தோறும் நடந்துகொண்டே வருகின்றது. இவர்களையும் கீழானவர்களெனமதிக்கலாகுமா.

நவரசம்.

ஒரு பருவத்தில் மரத்தினின்றும் இலைகள் உதிர்ந்தபோதிலும் மற்றொரு பருவத்தில் பச்சைப் பசேலென்று பழையபடி துளிர்த்து விடுகின்றன. அதேபோல ஒருசமயம் மட்டில்லாச்சங்கடங்களாகும் மறுசமயம் கவலையற்ற வாழ்வை நடத்துவான் என்பது திண்ணம்,

* * *

உலகமென்ற தோற்றத்தில் பணத்தாசையும், பெண்ணாசையும், மனிதனைப் பாழாக்கி விடுவன. இவை இரண்டில் ஒன்றையே அல்லது இரண்டினையுமோ கொண்டவன் இறுதியில் அழிந்தே போவான் என்பது திண்ணம்.

* * *

உலகத்தவர் யாவரும் ஒரேமாதிரி உடைகளை அணிவதில்லை. ஒரேவிதமான உணவை உண்பதுமில்லை. ஒரேமாதிரிக் கொள்கையையனுசரிப்பதுமில்லை பேசும் பாஷைகள் கூடப் பலவிதமாயிருக்கின்றன வணங்கிப்போற்றும் சமயங்கள் வெவ்வேறாயிருக்கின்றன. சாதிகள் எத்தனைபிரிவாகப் பிரிந்து காணப்படுகின்றன? இப்படிப் பலவகைப்பட்டிருக்கும் உலகத்தாருக்கு நாம்பயப்பட்டு எப்படி நடப்பது என்று சந்தேக முண்டாகும். ஒவ்வொருவனும் தன் மனச்சாட்சிக்கு விரோதமாய் நடவாதிருந்தால் அதுவே போதுமானது. அவனே புண்ணியவானாவன்.

* * *

மானிடசரீரமானது தோலோடுகூடிய மாமிசத்தாலும் எலும்பாலும் நரம்பாலுமமைக்கப்பெற்ற ஒன்பது துவாரங்களுடைய ஓர் கூடு. இந்தக் கூட்டுக்குள் ஆன்மாவெனும் உயிர நுழைந்தால்மட்டும இவ்வுடலால் உலகத்திற்கு ஏதேனும் பிரயோசனப் படக்கூடியதாயிருக்கும் அன்றேல் நாய், நரி, பேய், கழுகுகளுக்கே பயன்படக்கூடியதாயிருக்கும்.

* * *

பிறரை மரியாதையுடன் நீ நடத்துகிறவரைக்குந்தான். அந்தப்பிறர் உன்னிடம் மரியாதையுடன் நிற்பர். உனக்கு ஏதோபெரிய செல்வம் இருக்கிறதென மமதைகொண்டு அவனை ஒரு ஏழையென எண்ணி மரியாதைக்கு மீறிய வார்த்தைகளைச் சொல்லிக்கண்டபடி கேவலமாக நினைத்து எதையும் பேசத்தொடங்கினால் அந்த ஏழைமனிதன் அதைக்கேட்டுக் கொண்டிருப்பான் என்று எண்ணாதே, பிறகு என்ன சம்பவிக்கு மெனபதை நீயே உன் அனுபவத்திற் கண்டுகொள்.

* * *

விதியாவது உயிர்களோடு செயற்கையாயுள்ளது. மதியாவது உயிர்களோடு இயற்கையாயுள்ளது. ஆதலால் வினை செய்ததினால் விதி வந்ததேயன்றித் தானே வந்ததன்று. பலர் தம்காரியத்தில் அநுகூலப்படுவாராயின் அது தன்னாலே ஆனதென்றும், அநுகூலமடையாராயின் விதியாற் றடுக்கப்பட்டதென்றுஞ் சொல்லுவார்.

பொய்சொல்லிவாழலாமா என்பது பெரியோர் வாக்கியம். பொய்சொல்லாமல் பிழைக்க முடியுமா என்பது தற்கால நாகரீகத்தின் கேள்வி. பொய் பேசுவதாகிய கொடுங்காரியத்தினால் விளையும் தீமைகள் அநந்தம் அவைகளுள் மிகவும் கொடுமையான சிலவற்றையாவது தெரிந்துகொண்டால் ஒருபோதும் பொய் சொல்லக்கூடாதென்கிற மனோ உறுதி உண்டாவதற்குச் சாதகமாயிருக்கும்.

மாப்பிள்ளையைக் குஷ்டரோகியெனக்கண்ட பெண்.

கும்பகோணத்தை அடுத்த உப்பிலியப்பன்கோயிலில் சென்றகிழமை ஒரு கலியாணம் நிறைவேறியதாயிருந்தது எல்லாம் முடிந்து மணமகனும் மணமகளும் உப்பிலியப்பன் சந்நிதானத்தில் வந்து நின்றனர். மாப்பிள்ளை கையிலே தாலியுடன் தாலிகட்ட வருவதற்குரிய நல்லவேளையை எதிர்பார்த்து நின்றார். அச்சமையத்தில் மாப்பிள்ளை குஷ்டரோகியென்று எவ்வாறோ பெண்ணுக்குத் தெரியவரவே பெண் ஓட்டம் பிடித்து விட்டாள். குஷ்டரோகியைக் கலியாணஞ் செய்ய முடியாதென்று ஓரே பிடிவாதமாக அவள் மறுத்துவிட்டாள். இப்பெண்ணின் துணிவை எல்லோரும் மெச்சவேண்டும்.

பரலோகம் சென்றவர்களின் கணக்கு.

அமெரிக்கா நியூயார்க்கிலுள்ள டிரா வலர்ஸ் இன்ஷூரான்ஸ் கமபெனியார் வெளியிட்டிருக்கும் கணக்குப்படி சென்ற செனவரி மாதம் முதல் மார்ச்சு மாதம் முடிய மூன்று மாதத்திலும் அமெரிக்காவில் 4500 பேர் மோட்டார் வண்டிகளால் உயிரிழந்திருக்கிறார்கள். செனவரி மாதத்தில் ஒருநாளில் 55 பேர் வீதமும் பிப்ரவரி மாதத்தில் 45 பேர் வீதமும் பரலோகம் சென்றிருக்கிறார்களாம்.

14மாசக் குழந்தையின் சங்கித ஞானம்.

அமெரிக்கா ஸான் பிரான்சிஸ்கோவில் மாணவர்களாயிருந்த ஒரு வாலிபத் தந்தையும் தாயும் தங்கள் குழந்தையை ஒரு நாள் சால்வையால் போர்த்து எடுத்துக் கொண்டு ஒரு சங்கிதக் கச்சேரிக்குச் சென்றார்கள். சங்கிதம் நடக்கும் பொழுது பதினாலு மாதமே சென்ற அப்பிள்ளையானது சால்வையைத் தூக்கி நிமிர்ந்து தன் தாயிடம் உட்கார்ந்து கொண்டு சங்கிதத்தை வெகு ஜாக்கிரதையாகக் கவனித்து வந்ததாம். மூன்றாவது வயதில் அது வீணை வேண்டு மென்று கேட்டதாம். பெற்றோர்களுக்குச் சங்கித ஞானமே கிடையாதாம் அடிக்கடி அது சங்கிதங் கேட்டு வந்ததாம். பெற்றோர்களிடம் பணமில்லாததால் ஒரு விளையாட்டுப் பிடில் வாங்கிக் கொடுத்தார்கள். அதனை அக்குழந்தை உடனே உடைத்து விட்டது. பின் அதன் பாட்டி ஒருத்தி அதற்கு ஒரு நல்ல பிடில் வாங்கிக்கொடுத்தாள். அப்போது அதற்கு வயது நான்கு. இரண்டு வருஷத்துக்குள் அது பிடில் வாசிப்பதில் அரிய திறமையடைந்து விட்டது. இப்பொழுது அவனுக்கு வயது 12. இனிப் படிக்கவேண்டியது இல்லை யென்ற நிலையில் அவன் சங்கிதத்தில் ஞானம் பெற்றுவிட்டான். அவன் பெயர் ஜெகுடி மெனூஹின் ஜெர்மனியிலுள்ள சங்கிதப் புலவர்களெல்லாம் வியப்படைகிறார்கள். பெர்லினில் அவன் பாடியபொழுது எயின்ஸ்டீன் என்ற பெரும் புலவர் எழுந்து அவனிடம் சென்று "எனது அருமைச் சிறுவ! நீ, இன்று எனக்குக் கற்பித்தது போன்ற பாடத்தைக் கேட்கும் பாக்கியம் பெற்றும் பல வருஷங்களாயின என்றாராம்.

மக்கட்பிறவியின் அருமையும் உடம்பின் பெருமையும்.

—:0:—

(முற்றொடர்.)

தலையின் உச்சியில் ழளை இருக்கிறது. இடத்தில் சந்திரமண்டலந்தானிருக்கிறது என்பதற்கு அத்தாட்சியாக மேல்நாட்டவரும் ழளை பிசகிய ஒரு மனிதனை "சந்திரனிலுள்ள ஒரு மனிதன்" என்று சொல்வதுண்டு; பைத்தியம் பிடித்தவர்களை வைத்திருக்கிற வைத்திய சாலைக்கு "சந்திர சிறைக்கூடம் என்று பெயரிருக்கிறது. இதனாலே தமிழ்ச் சித்த வைத்தியத்தில் சொல்லப்பட்டிருக்கிற நிலவு மண்டலமானது மக்கள் தலையின் உச்சியில் இருக்கிறது என்பது திண்ணமாகத் தெரிகிறது. இவ்வாறே மற்ற மண்டலங்களின் உண்மைகளையும் கண்டுகொள்ளலாம்.

இனி, ழலிகை உப்பு, நச்சுப்பொருள்கள், உலோகங்களிலும் வாத பித்த சேடச் சரக்குகள், உப்புப் புளிச் சரக்குகள், சத்துரு மித்துரு மித்துருக்கள் முதலிய பலவகை உண்மைகளிருக்கின்றன. இந்த உட்கருத்துக்களையும் நன்றாயுணர்ந்து வைத்தியர்கள் மருந்து செய்யவேண்டும். மக்கள் உடம்பில் 152 மர்ம நாடிகளிருக்கின்றன. அவைகளிருக்குமிடங்களைக் கண்டு அவ்விடங்களிற் றட்டினால் சில வியாதிகள் தீர்ந்துவிடும் அல்லது சில வியாதிகளைப் புதிதாக உண்டாக்கி விடலாம்; பித்தவர்ம நாடியானது ஒருவருக்கு கண்டத்தில் இருபக்கத்திலும் ஓடுகிறது. பித்தநாடியை இடமறிந்து பிடித்தால் ஒருவன் வாந்தியெடுத்துக்கொண்டேயிருப்பான். உடம்பெல்லாம் நடுங்கினவண்ணமாயிருக்கும். இதைக் குணப்படுத்துவதற்கு முதுகில் கையால் அடித்தால் நின்றுவிடும். உடம்பில் மரணவர்மம் ஆறு இடங்களில் இருக்கின்றனவாம்; அவைகளைத் தெரிந்து தட்டினால் மனிதன் இறந்துவிடுவானென்பதுண்டு. இந்த இரகசியங்களைத் தெரிந்தவர்கள் இன்றைக்கும் நம் தமிழ்நாட்டில் இருப்பார்களென்க கொள்ளவேண்டும். (வரும்.)

சுதேசவைத்தியன், M. P.

பத்திரிகை.

பத்திரிகை எனப்படுவது நாட்டிற்கு அவசியமான பொருளாகும். பத்திரிகை என்பது பத்திர மென்ற பகுதியினடியாய்ப் பிறந்த காரணப் பெயர். உவமை குறித்து வந்த பத்திரமென்ற சொல். தளிர், அழகு, இறகு, ஆயுதம், அம்பு என்ற பல பொருளைக் குறிக்கும். அந்த உவமான உவமேயங்களைச் சிறிதாராய்வோம்.

1. தளிர்-வித்தென்ற பகுதியி னடியாய்ப் பிறந்தது. வேதங்கள் வித்தாகவும், ஆகமங்கள், ஸ்மிருதிகள், முதலியன அவ்வித்தின் நின்று உண்டான விருக்ஷமாகும். புருடார்த்த நூல்கள், கொத்துக்களாகவும் சீவான்மாக்களின் அறிவு விளக்கம் உலக முன்னேற்றம் அரிய விஷயங்களைப் பகிரங்கப் படுத்தல், முதலிய விஷயங்களின் பொறுப்பேற்று நல்லாசிரியராற் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் தளிராகவும் பத்திரிகைகள் போதிக்கும் உண்மை நீதிகளைக் கேட்டுச் சிந்தித்து தெளிந்து அடையும் பக்குவங்கள் தளிரினடுக்கினின்றுண்டாகும், அரும்பு மலர் காய் கனிகளாக யூகிக்கலாம்.

விரும்புஞ் சரிதை முதன் மெய்ஞான நான்கும் 1. அரும்பு மலர் காய்கனி போலன்றோ பாரபரமே 11. என்று தாயுமானவரும் ஆகலில் பத்திரிகையின் வியாசங்கள் பற்பலவாய்க் கற்பனையாய் விரியும். அவ் விரிவு வேதாகம சாரங்களை யொட்டி வருவதேயாகும். 2. அழகு, மேற்போந்த தளிர், மரத்திற்கும் நிலத்திற்கும், கண் கவரும் பச்சென்ற வனப்பை யீவதும், தலையிற் கோடை வெப்பம் முதலியன தாங்கி அண்டின மக்களுக்கு உள்ளமு முடலுந் தண்ணெனச் செய்வது போலப் பத்திரிகைகள், நூல்களுக்கும், ஆசிரியர்களுக்கும், போதனையாற் சீர்ப்படு முலகத்திற்கும், ஒருங்கே அழகுதர நிற்றலாகும். அன்றியும்,

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல்
ஓசையுடைமை யாழமுடைத் தாதல்
முறையின் வைப்பே யுலகமலையாமை
வழுவியது பயத்தல் விளங்குதாரணத்த
தாகுதனூலிற் கழகெனும் பத்தே.

என்று நன்னூல் கூற்றுப்படி இவ்வழகுகளையேயேற்று நிற்பதே பத்திரிகைகளின் இலக்கணமாகும். 3, இறகு பக்ஷிசாதிகளிற் சனித்த

(தொடர்ச்சி நாலாம்பக்கம் பார்க்க.)

சந்தாநேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

ஐயன்மீர் தங்களால் வரவேண்டிய திராவிடன் சந்தாப்பணத்தை அனுப்பித்தரும்படிக்குக் கேட்கிறோம். பணம் அனுப்பாதவர்களுக்கு அடுத்தமாதப்பத்திரிகை வி. பி. மூலம் அனுப்பப்படும். தயவுசெய்து V P. க்குப் பணங் கட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

திராவிடன்.

சுன்னாகம்:—சுக்கிலவரு ஆனிமீ ௧௦௨ ஞாயிற்றுக்கிழமை.

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க, முன்னின்றுபின்னோக்காச்சொல்.குறள்.

கல்வியே வேண்டும்.

"கல்லாதானொட்பங்கழியநன்றாயினுங்
கொள்ளாரறிவுடையோர்."—குறள்.

"கல்விக்கரையில், கற்பவர் நாள் சில" என்றனர் ஆன்றோர். சில வாழ் நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மாந்தர்கள் கற்றுணரவேண்டிய நூற்கருத்துக்கள் எண்ணிலவாயுள்ளன, எனினும், அவற்றையெல்லாம் ஒருங்கே இப்பிறப்பிற்றானே கற்றுணர்வது இயலாததொன்று. இயல்பாகவே உள்ள வாழ்நாளின் பெரும் பகுதியும் தூக்கத்தில் கழிந்துபோகின்றது. பெரும்பாகம் அறியாமைப் பருவத்திலும் பற்பல பிணிகளிலும் பொருள் தேடுவதற்குரிய உழைப்பிலும் இளைப்பாறுவதிலும் கழிகின்றது. எஞ்சிய வாழ்நாளின் ஓர் சிறு பாகமே இச்சிறிய காலத்திற்குள் எல்லாநூல்களையும் எங்ஙனம் ஒருவன் படித்தல் கூடும்? அறிவுடையோர் பலரும் அரிய நூல்களை இயற்றி விட்டேச் சேனறனர். அவைகளையெல்லாம் ஒருவனே கற்றுணர்வது எளியதொன்றன்று; நூல்களை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டிருக்கின்றன வாசலின் புதியராய் வரும் வித்துவான்களுக்கு மிகுந்த முயற்சி இன்றியமையாதாகின்றது. ஒருவன் கற்றிலனாயின் எத்துணை அறிவுடையவனாயிருப்பினும் அவன் அறிவை மேலோர் பொருட்படுத்தமாட்டார்கள். ஆதலான் ஒவ்வொருவனும் கல்வியின்கண் பேட்புடையனாதல் வேண்டும். கற்றோர்கள் எவ்விடத்தும் தம் கல்வியறிவால் ஆட்சி புரிவர் அவர்கள் தாம் சென்றவிடமெல்லாம் சிறப்பெய்தி நிற்பர். அன்றியும் கற்கையுடையவனே மேற்குலத் துதித்தவனுமாவன். அவன் கண்ணே நற்குல ஒழுக்கம் காணப்படும். கல்லாதவன் தன் குலத்தையும் சீர்கெடச் செய்தவனாகின்றான் ஆதலால் அவன் தனது குலத்தின் மேனமையை இன்னொருவருக்குக் கூறப்புகுவானாயின் ஆன்றோர் நகைக்கிடனாமென்க.

"அறிவுடைய ஒருவனை அரசனும் விரும்புவான்" என்றபடி கல்வியை ஒவ்வொருவரும் விரும்பிக் கற்கவேண்டும். ஒருவன் எப்பயனை அடைய வேண்டுமாயினும் அதற்குரிய முயற்சியே இன்றியமையாததாய் முடிகின்றது. அதுபோன்றே கல்வியைக் கற்கவேண்டுமெனினும் அதற்குரிய முயற்சியும் அகத்தியம் வேண்டற்பாலதே.

ஒவ்வொரு கருத்துக்களையும் அறியும் ஆற்றல் அடைந்தவுடன் தாய் தந்தையர்கள் தம்பிள்ளைகளைக் கல்வி பயில விடுகின்றனர். அப்பருவத்தே தான் பிள்ளைகள் சிற்சில கருத்துக்களைத் தம் மனத்தில் அழுத்திக்கொள்ளும் ஆற்றலுடையவர்களாயிருக்கின்றார்கள். அப்போதைக்குத் தகுந்த கருத்துக்களைத் தான் அப்பிள்ளைகளுக்கு ஆசிரியர் புகட்டவேண்டும். பிள்ளைகள் நாளடைவில் புதுபுதுக் கருத்துக்களை உணர்ந்து கொள்ளும் ஆற்றலை அடைகிறார்கள். அப்பருவத்தில் பிள்ளைகள் கல்வியைப் புறக்கணிப்பராயின் பின்னர் அவர் உளளத்தில் கல்வி நிலைபெறுமற்போம்; சற்கையில் தமக்குளவாகும் ஐயங்களை அப்போதைக்கப்போது ஆசிரியரிடத்தும் மேலோரிடத்தும் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். கல்வியின்று தேர்ச்சி பெறுங்கால் புதிய கருத்துக்கள் புலப்படும். இங்ஙனம் பல கருத்தமைத் தொழுதப்படுவதையே நாம் நூல் என்கின்றோம். மேலோர் செய்த நூல்களெல்லாம் சிறந்த கருத்துக்களமைந்துள்ளனவாம். "கற்க கசடறக் கற்பவை" என்பதற் கிணங்க, சற்கத் தகுவனவற்றைக் குற்றமறக் கற்றம் கற்றபோருளைப் புரட்டியும் நூல்களாய்த் திரட்டியும் பழகுதல் வேண்டும். இங்ஙனம் பழகியவரது கல்வி இளம் பிறைச்சந்திரன போல் என்றும் வளர்ந்தோங்குமென்பதில் ஐயமில்லை

மக்களின் உரிமை.

—:o:—

உலகத்தில் தோன்றிய மக்களெவர்க்கும் உளள உரிமைகளையும் அவற்றை அடைவதற்கு அவர்கள கைக்கொளள வேண்டிய முறைகளையும் நாம் நன்கு சிந்தித்தல் அத்தியாவசியகம். மன உணர்ச்சியாகிய ஒருவது அறிவினையும் திருந்த பெற்ற மக்களுளளே ஆளுவோர் என்றும், ஆளப்படுவோரென்றும, முதலாளியென்றும், பொருளாளியென்றும, வறியோர் என்றும், அடிமையென்றும், நல்லார், பொல்லார், அன்பர், அருளாளர், வன்கண்ணர என்ற பல்வேறுவகையினையும், பல்வேறு குணத்தினையும், பல்வேறு செயலினையும் உடையராவர். இவைகளை உண்மையுடன் நோக்கினால் இன்னும் பலவாம் ஆண்டவனுடைய படைப்புக்களாகிய நிலம, நீர், நெருப்பு, வெளி, ஒளி ஆகியவற்றால் உண்டாகும் இயற்கை இன்பத்தைச் சமமாக நுகர்தற்குளள நிலைமையிலிருத்தல் எளப் பலவகைப்படும் உரிமையென்பது மக்களாவ்வருவருக்கும் உரியது என்றாகும். ஒரு காரணத்தாலேயே எவையெவை ஒருவருக்கு இருக்தே தீரவேண்டுமோ அவற்றைக் குறிப்பதாகும்.

பொதுவாக மக்கள் எல்லா சீவராசிகளிடத்தும் அன்புசெலுத்தவேண்டும். இதுவே பெரிய மகான்களெல்லாம் காட்டியவழி. தற்காலத்தில் மக்கள் அதிகமாய் நாகரீகத்தின்வாய்ப்பட்டிருப்பதால் ஒருவருக்கொருவர் பயப்படுவது தான் அதிகம். இதனை ஒருவாறு களைவதற்காகவே அன்புசெலுத்தவேண்டுமெனக் கூறுகின்றது பயமென்னும் மனோவியாதியினால் விரோதம் வளர்கிறது. விரோதத்தால் மனிதசாதி வீணாக அருகிறது எல்லோருக்குமே கஷ்டமுண்டாகிறது அன்பிருந்தால் பயம் தெளிந்துபோகும். ஒரு எளியவன் அன்புதொடங்கியும் வலியவன் அதை அலட்சியம் செய்யாது சும்மாயிருந்தால் ஒன்றும் நடக்காது எளியவன் வலியவனை விரும்பிநடக்கவேண்டும் வலியவன் எளியவனிடம் அன்புசெலுத்தவேண்டும். அதுவே ஒற்றுமை ஒன்றியிருக்குந்தன்மை இது பிறர் தம்மொடு ஒற்றுமையாயிருப்பது என்ற பொருளுடையதன்று. பிறரோடு தாம் ஒற்றுமையாயிருத்தல் எனப்பகுத்தோதப்படும். இந்த ஒற்றுமை ஒருவர் இருவரோடு நிலைபெறுவதன்று. ஆனால் அஃது உலகத்துள்ள மக்களாவர். அனைவரிடத்தும் ஒருபடித்தாக அமைவதால் இனிது நிறைவேறுவதாகும் இங்ஙனம் அமைந்த ஒற்றுமைதான் மக்களுடைய உயிருக்கும் பொருளுக்கும் தீங்கை விளைவிக்கக்கூடிய பெருமாறுதல்களைச் செய்து பலரையும் துன்பத்திற்குள்ளாக்காது அமைதியாகப் பொதுமக்களிடத்திலே சிறிது சிறிதாகப் பரவி எவரிடத்திலும் சகோதரபாவத்தையும் சமநோக்கத்தையும் நடுநிலைமையையும் ஏதும் தீங்கும் கஷ்டமுமின்றி காளடைவில் வளர்க்கத்தக்க வன்மையினை வாய்ந்ததாகும்.

ஸ்ரீ சாரதாதேவியின் அம்சமாகிய ஔவைப்பிராட்டியாரின் அற்புத சரிதை.

வண்ணைநகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள் எழுதியது.

(முற்றொடர்.)

இங்ஙனம் திருவள்ளுவநாயனார் தனது அன்னை தந்தையரின் திருநாமங்களையும், தனது நாமத்தையுஞ் சாற்றியவுடனே ஔவையார் அவரைத் தனது அனுசனெனத் தெளிந்து, மட்டற்ற உவகையூத்து, அத்திருக்குறள் வரையப்பெற்ற அப்புத்தகத்தை வாங்கி, அதிற் சில அதிகாரங்களைப் படித்துப்பார்த்து, அந்நூலின்கண்ணே அமைந்துள்ள சொன்னயம், பொருணயம் முதலிய நவரசங்களையும் உற்று நோக்கி, இவர் அம்புயாசனன் அவதாரமேயென மகமகிழ்ந்து, அன்பார்ந்த களிஷ்டனோடு சிறிது சம்பாஷணை செய்ய அவாவுற்று, தம்பி கவிஞர்தில.! புருஷார்த்தங்கள் நான்கினுள் வீட்டு நெறியை நீக்கி அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று விஷயங்களையும் விளக்குதற்கு இத்துணை உலப்பற்ற செய்யுளமைந்த பனுவல் வேண்டுமா? அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் ஒரு செய்யுளில் அமைத்துக் கூற முடியாதா? என வினவினார் அம்மாற்றத்தைச் செவியுற்ற தெய்வப்புலவர் ஔவையாரை விளித்து அம்மணி! அடியேன மேதினியோர்க்கு விளக்க வந்த மூன்று விஷயங்களையும, ஆயிரத்து முந்நூற்றறுபது செய்யுட்களால் விரித்துக் கூறியும் பூரணப்படவில்லையே! என்று எனது சிறுதையானது சந்ததமுஞ் சங்கோசமடைகின்றது. அம்மூன்று விஷயங்களுடன் ஈற்றிலுள்ளதாகிய வீட்டு நெறியையுஞ் சேர்த்து ஒரு செய்யுளில் அமைத்துக் கூறவதெப்படி? இதுவுமன்றி ஆற்றல் எத்தகைய கவிவாணருக்குஞ் சாத்தியப்படத் தக்கதல்லவே? அங்ஙனம் அந்நான்கு விஷயங்களையும் ஒரு கவியில் அமைத்துப்பாடுஞ் சாதுரியர் தங்கட்குளதாயின் இயற்றிக்காட்டுவென்றனர். உடனே பிராட்டியார் உள்ளத்தி லுவகையூத்து, எங்ஙனு வரையாது கொடுத்தலே அறமாகும் பாவலழிகளை நிராகரித்துப் புண்ணிய வழிகளைக் கடைப்பிடித் தீட்டுவதே பொருளாகும்; ஒருவர் மீதொருவர் அனுதாபமுடையும் அன்பு நெகிழ்ச்சியற்ற நாயகன்நாயகி என்னுமிருவரும் தங்கள் சிந்தை யொருப்பட்டுக் கலத்தலே இன்பமாகும் பராபரவஸ்துவாகிய சிவத்தை அனவரதமுந் தியானித்து, மூற்றுறிய அறம் பொருள், இன்பம் என்னும் மூன்றையும் விட்டொழிந்த நிலையே, நித்தியமும்பேரின்பத்தை யளிக்கின்ற மோட்சமாகும் என்னுங் கருத்தையமைத்து,

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருளெஞ்
ஞான்றுங் காதலிருவர் கருத்தொத்து—ஆதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்
மூன்றும் விட்டதே பேரின்ப வீடு"

என்னும் வெண்பாவைப் பாடியருளினார் அக்கவியைக்கேட்ட பெருநாவலர் மட்டற்ற இறும்பூதெய்தி, இவர் ஆசுகவித்திறம் படைத்தவரென உன்னி அம்மணி! உனது அன்னை தந்தையர் யாவர்? உமது திருநாமம் யாது என்றனர், அதனைக்கேட்ட ஔவையார் புன்முறுவல் பூத்து தம்பியான்உனது மூத்தசகோதரியென உணர்குதி ஔவையென்று என்னை அறிஞர் அழைப்பார்கள் என்று விடையிறுத்தனர் உடனே நாயனார் தன்னைப்பெற்ற இருமாதாக்களையும் எதிரே தரிசித்ததுமான மிக்க ஆராமையோடு அவரது பாதசரோருகங்களில் வீழ்ந்து வணங்கினர் பிராட்டியார் தனது இருகரங்களினாலும் வாரியெடுத்து ஆசி கூறி, அவரை விளித்து எனதன்பார்ந்த களிட்ட! நீ சங்கத்தார் முன்னிலையில் இத்திருக்குறளை அரங்கேற்றச் செல்குநராயின் நானுங்கூட வருகின்றேனென்றனர். [தொடரும்]

நல்லூர்க் கந்தசுவாமிகோவில் வழக்கு.

கோவிற்பரிபாலனத்தைப்பற்றிய தீர்ப்பு.

யாழ்ப்பாணம் பெரிய நீதிஸ்தலத்தில் நல்லூர்க்கந்தசுவாமிகோவிற் பரிபாலன முறையைப்பற்றி 2-ம் பிரிவு வியாச்சியத்திற்குஷி நீதிபதியவர்கள் பின்வருமாறு தீர்ப்புச் செய்தனர்.

இத் தீர்ப்பில் கோயிலதிகாரியினுடைய கடமைகள் வரையறுக்கப் பட்டிருத்தலோடுஷி அதிகாரிக்குத் துணைசெய்வதற்குக் கல்வியறிவொழுக்கமுற்ற இன்னுமொருவர் (கமிஷனர்) நியமிக்கப்படல் வேண்டுமென்றும் சொல்லப் பட்டிருக்கிறது.

1 குறித்த கோவிலதிகாரி இருலேகர்களை ஏற்படுத்தல்வேண்டும். அவர்களுடைய மாசவேதனம் தனித்தனி 35 ரூபா தொடக்கம் 50 ரூபா வரைக்கும் கொடுக்கப்படும். இந்த லேகர்களுள் ஒருவர் கோயிலதிகாரியாலும் மற்றவர் கமிஷனராலும் தெரிவுசெய்து நியமிக்கப்படல்வேண்டும். ஆனால் இருலேகர்களும் கோவில் அதிகாரி கமிஷனர் ஆகிய இருவருடைய கட்டுப்பாட்டுகளுள் அமைந்துநடக்க வேண்டும்.

2. கோயில் அதிகாரியாய் உள்ளவர் கீழே சொல்லப்படும கணக்குப் புஸ்தகங்களையும் பதிவு செய்தற்காகிய புஸ்தகங்களையும் கிரமமாக எழுதி வரவேண்டும். (1) கோயிலிலுள்ள நேர்த்திக் கடனுக்காகக் கொடுக்கப்பட்ட பொன் வெள்ளிப் பொருள்கள் திரு ஆபரணங்கள் அவைகள் பெறுமதியான விலை என்னும் இவைகள் பதிவு செய்தற்காகிய புஸ்தகம். (2) கோயிலில் உள்ள தேர், வாகனம் முதலியவையின் விபரம் எழுதப்படுதற்காக ஒரு புஸ்தகம் இவைகள் வைத்திருக்கப்பட வேண்டிய பொறுப்பையும் மேற்படி அதிகாரியை நிர்வகித்தல் வேண்டும். (3) கோயிலில் நிகழும் கிரியைகளின்பொருட்டு வாங்கப்பெற்ற பொருள்களின் விபரங்கொண்ட ஒரு கணக்குப்புத்தகத்தை அதிகாரி வைத்திருத்தல்வேண்டும். குறித்த புத்தகத்தைக் கோயிலிலேயே வைத்துக்கொள்ளுதல்வேண்டும். பின்னர் இந்தப் பொருளின் விலை, செலவான தொகை என்னுமிவைகளையெல்லாம் "பேரேடு" எனப்படுங் கணக்குப்புத்தகத்திற் பதிந்துவிடுதல்வேண்டும். (4) கோயிலுக்குரிய பசுக்கள் மாடுகளின் தொகையும் அவைகளைப் பராபரித்தற் செலவும் அதிகாரியாற் கிரமமாக ஒரு புத்தகத்தில் வரையப்படுதல்வேண்டும். (5) கோயிலுக்குரிய ஆதனங்களின் விபரம், குத்தகை கொடுக்கப்பட்டனவோ இல்லையோ என்ற விபரம, அவற்றின் வருவாய் என்னும் இவைகள் எழுதுதற்கான ஒரு கணக்குப் புத்தகத்தையும் ஷி கோயிலதிகாரி வைத்திருத்தல் வேண்டும். (6) அலட்சியமாய் வருவாயின்றிக் கிடக்கும் காணிகளைக் குத்தகைக்குக் கொடுத்தேனும் செய்கைபண்ணியேனும் வருவாயை அவர் ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். இந்த ஆதனங்களின் வருவாய் செலவு என்னுமிவைகள் "பேரேடு" என்னும் கணக்குப் புத்தகத்திற் பதியப்படல் வேண்டும். (7) கோயில் வேலைக்காரர் பூசகர் முதலியோரின்விபரத்தையும் மாசவேதனத்தையுங் கொண்ட ஒரு கணக்குப் புத்தகத்தை அதிகாரி வைத்திருத்தல் வேண்டும். வேதனம் பெறுபவரின் கைச்சாத்துப் பெற்றுக் கொண்டே அவரவர் மாசவேதனம் உதவப் படல்வேண்டும். வேண்டிய காலங்களில் இவர்களின் வேதனத்தை உயர்த்திக் கொடுப்பதற்கும் குறைப்பதற்கும் வேலைகாரரின் தொகையைக் கூட்டுவதற்குங் குறைபபதற்கும் அதிகாரிக்கு அதிகாரமுண்டு. ஆனால் இவைகளை அதிகாரி கமிஷனருடைய சம்மதத்தோடுதான் செய்தல் வேண்டும்.

கணக்குப் புத்தகங்கள்.

(8) கணக்குகளெல்லாம் கடைசித் தேதி வரையில் பதியப்பட்டிருக்கின்றனவோ வென்பதற்கு அதிகாரியே பொறுப்பாவர்; (.) வரவு செலவுக் கணக்குகளைக் கொண்ட ஒரு கணக்குப் புத்தகம் அதிகாரியாலேனும் அவர் கட்டளைப்படி ஒரு லிகிதராலேனும் கிரமமாக எழுதப்படல் வேண்டும். (b) எடுக்கப்பட்ட பணத்தின் தொகையும் அப்பணத்தைச் செலவிட்ட கணக்கு விபரமுங் கொண்ட ஒரு கணக்குப் புத்தகம் ஷி அதிகாரி பொறுப்பிலேனும் இல்லையேல் அவர் மேற்பார்வையில் ஒரு லிகிதர் பொறுப்பிலேனும் எழுதப்பட்டு வருதல் வேண்டும். இப்படி யெடுக்கப்படும்.பணம் ஒருமுறையில், 1500ரூபாவிற்கு மேற்படவொண்ணாது. இதன் செலவுக் கணக்குக் காட்டிச் சரிபார்த்து அதன் பின்பே வேறு பணம் எடுத்தலாகும். அதிகாரி 1500ரூபாவிற்கு மேற்பட்டதொகைப் பணத்தை ஒரு போதும் ஏககாலத்தில் தம் பொறுப்பில் வைத்திருக்கவொண்ணாது. 1500 ரூபாவிற்கு மேற்பட்ட பணம் அதிகாரி கையில் வருமானால், எஞ்சிய அந்தப்பணத்தைக் கோர்ட்டார் அங்கீகரிக்கும் ஒரு பண வங்கில் அதிகாரி பேரில் இட்டு வருதல் வேண்டும். (.) குறிப்பேட்டிற் பதியப் பெற்ற கணக்குகளை நாள்தோறும் இன்னொரு கணக்குப் புத்தகத்திற் பதிதல் வேண்டும். (1) மற்றைக் கணக்குப் புத்தகங்களிலுள்ள கணக்குகளெல்லாம் கிரமமாகப் பதியப் பெற்ற பேரேடு ஒன்று வைத்திருத்தல் வேண்டும். (.) பற்றுச் சீட்டுகளின் அடிச்சீட்டுகள் 10ரூபாவிற்கு மேற்பட்ட செலவுக் கணக்குகள் பணம் பெற்றவருடைய பற்றுச் சீட்டுடனிருத்தல் வேண்டும். எல்லாவருவாய்க் கணக்கிற்கும் அத்தாட்சியாக அடிச்சீட்டுப் புத்தகம் இருத்தல் வேண்டும். (.) சேம வங்குப் பாஸ்புத்தகம், செய்க்புத்தகம் என்னும் இரண்டு மிருத்தல் வேண்டும்.

(9) கோயிலதிகாரி கோயிலில் யாதுந் திருப்பணித் திருத்தங்கள் செய்ய விரும்பினால் கமிஷனருடன் யோசித்த பின்னரே அவற்றைச் செய்தல் வேண்டும். இருவருக்கு மிடையே அபிப்பிராய பேதமுண்டாகுமானால் இருவரும் விஷயத்தை விண்ணப்ப பத்திர மூலமாகக் கோர்ட்டாருக்குத் தனித்தனி மனுப்பண்ணுதற்குரியராவர். 100ரூபாவிற்கு மேற்படாத சிறிய திருப்பணிகளையும் திருத்தங்களையுஞ் செய்வதற்கு ஷி அதிகாரிக்கு அதிகாரமுண்டு. ஆனால் அங்ஙனஞ் செலவிட்ட பணங்களெல்லாவற்றிற்கும் பற்றுச் சீட்டு இருத்தல் வேண்டும். கோர்ட்டாருடைய அனுமதி யின்றிக் கோயிலின்பொருட்டு எவ்வகையானகடனையும் வாங்குதற்கு அதிகாரிக்கு அதிகாரமில்லையாகும்.

(10) அதிகாரியா யுள்ளவர்கள் மாசந்தோறும் கணக்கு முடித்து தினக் குறிப்பு பேரேடு முதலிய கணக்குப் புத்தகங்களிலே உள்ள கணக்கை எவ்விதமான வித்தியாசங்களும் வாராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தக் கணக்குகள் எல்லாவற்றிற்கும் அதிகாரியின் கைச்சாத்தோடு கொம்மிஷனரது கைச்சாத்தும் இடப்பட்டிருக்கவேண்டும். கொம்மிஷனர் குறித்த குறித்த பணத்தைக் கொண்டு குறித்த குறித்த பொருள்கள் வாங்கப்பட்டனவோ, அவைகள் தக்கபடிசெலவிடப்பட்டனவோஎன்னும் இவைகளைப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

(11) கோவிலுக்குரிய அசைவற்ற பொருள்களை அசைவுள்ள பொருள்களை கோர்ட்டார் அது அனுமதியின்றி கோவில் அதிகாரி விற்பதற்கும் நன்கொடை செய்தற்கும் ஈடு வைத்தற்கும் அதிகாரமுள்ளவராக மாட்டார்.

(12) ஒருவருஷமுடிவிலேனும் வருஷம்முடிந்து அடுத்த மாதம் இருபதாந் திகதியிலுள்ளேனும் கோவில் அதிகாரி வரவு செலவுக்கணக்குப் பத்திரம் முடித்து இரு பிரதிகளில் வரைந்து ஒரு பிரதியை கோவிலில் விளம்பரம் செய்யவேண்டும். மற்றப்பிரதியை கொம்மிஷனர் மூலமாக கோர்ட்டாருக்கு அனுப்பவேண்டும். அங்ஙனம் அனுப்பும் போது கொம்மிஷனரும் தன்அபிப்பிராயத்தையும் அதில்குறித்துவிடல்வேண்டும்.

(13) கோவில்அதிகாரி தம்முடையசொந்தச் செலவிற்கும் இரண்டாம்எதிரியின் செலவிற்குமாக எடுக்கும் பணம் வருஷத்தில் ரூபா 4000 விற்கு அல்லது மாசத்தில் ரூபா 333 38சதத்துக்கு அல்லது வரும்படியில் பத்தில்ஒன்றிற்கு மேற்படவொண்ணாது. இந்தத்தொகையோடு மாசம் முப்பது ரூபா அதிகாரிக்கு பிரயாணச் செலவாய் உதவப்படும்.

(14) அதிகாரியின் சொந்தச் செலவுக் கணக்குகள் மேலே சொல்லப்பட்ட கணக்குப் புத்தகங்களில் பதியப்பட வேண்டியனவல்ல. ஆனால் அவர் சொந்தச்செலவுக்காக காலந்தோறும் எடுக்கும் பணத்தின் தொகை மாத்திரம் பதியப்படவேண்டும்.

(15) குறித்த கோவில் அதிகாரி மேலே சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய நடவாது ஒழிந்தால் அல்லது நடக்க மறுத்தால் அல்லது இந்தப் பிரமாணங்களை மீறினால் அல்லது கோவிலுக்குள்ள பொருளை அபகரித்தால் இங்ஙனம் செய்தார் என்பது தக்க ஆதாரத்துடன் கொம்மிஷனரால் கோர்ட்டாருக்குத் தெரிவிக்கப்படின் சமையோசிதமாக அவரைக் கடமையினின்று விலக்குவதற்கும் அல்லது முற்றாக வேலையினின்று நீக்குவதற்கும் கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டு. இப்படிப்பட்ட சந்தற்பங்களில் கொம்மிஷனர் அதிகாரியை எதிரியாகக் கொண்டு கோர்ட்டாருக்கு மனுப்பண்ணுதல் வேண்டும்.

(16) கணக்குப் புத்தகங்கள் பணம் திருவாபரணம் முதலிய பொருள்களைச் சேமித்தவைப்பதற்கு கோவிலில் தக்க பாதுகாப்பில்லாவிட்டால் மேற்படி அதிகாரி ஒரு இரும்புப் பெட்டகத்தை வாங்கி அதில் சேமித்தலைப்

தல் வேண்டும். பணவங்கியில் இடப்படாத பணம் முழுவதையும் குறித்த இரும்புப் பெட்டகத்தில் உள்ளேயே வைத்தல் வேண்டும்.

(17) கோவில் அதிகாரிக்கும் பூசகருக்கும் உள்ள விஷயங்களில் பிரவேசிப்பதற்கு கொம்மிஷனருக்கு எவ்வித அதிகாரமும் இல்லையாம். ஆனால் கணக்குப் புத்தகங்களைச் சரிபார்ப்பதற்கும் கையிருப்புத் திட்டத்தை சோதித்துப் பார்ப்பதற்கும் கொம்மிஷனருக்கு அதிகாரமுண்டு.

மேலே குறிக்கப்பட்ட விஷயங்களுள் எதனையும் காட்டும்படி கொம்மிஷனர் எழுத்து மூலமாக அதிகாரிக்குத் தெரிவிப்பரேல் அதிகாரி உடனே அந்த விஷயத்தைக் காட்டுதல் வேண்டும்.

கமிஷனரின் கடமைகள்.

(1) கமிஷனராயுள்ளவர் கோட்டாரின் பிரமாணங்களை நிறைவேற்றுதற்கும் வரவு செலவுக் கணக்குகளைச் செவ்வனே வைத்திருப்பதற்கும் கோயிலதிகாரிக்குத் துணைச்செய்தல் வேண்டும்.

(2) கோயிலதிகாரியும் அவருடைய லேகர்களும் வைத்திருக்கும் கணக்குப் புத்தகங்களை எந்த நேரமும் பார்த்தற்குக் கமிஷனருக்குக் அதிகாரமுண்டு.

(3) வேண்டிய காலங்களிலே வரவு செலவுக் கணக்கைச் சரி பார்ப்பதற்கும் கணக்குகள் சரியாக விருந்தால் தாமும் கைச்சாத்திடுவதற்கும் அவருக்கு அதிகாரமுண்டு.

(4) வருவாயாகவுள்ள பணத்தைக் கணக்குப் புத்தகங்களிற் பிழைகளின்றிப் பதிதற்கும் செலவு கணக்கைப் பதிதற்கும் பிழைகளிருந்தாற் றிருத்துவதற்கும் அவருக்கு அதிகாரமுண்டு.

(5) குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமான தொகையை கோயிலதிகாரி தன் சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் செலவு செய்யும் பொழுது கமிஷனர் அதனைக் கோட்டாருக்கு அறிவிக்கலாம். அங்ஙனம் செய்யின் கோட்டார் கோவிலதிகாரியை விசாரணை செய்வர்.

(6) கமிஷனருக்குக் கோட்டார் உத்தரவின் படி ஒரு பெருந்தொகைப் பணங் கொடுக்கப்படுவதோடு அவருடைய பிரயாணச்செலவிற்காகவும் ஒரு தொகைப்பணம் உதவப்படும் இந்தத் தொகைகளைக் கேட்ட நேரம் கோயிலதிகாரியே கோட்டில் கட்டிவிடுதல் வேண்டும்.

(7) பிழைசெய்தார் என்னும் குற்றச்சாட்டின்பேராற் கோட்டார் விலக்கினால் அல்லாமல் கமிஷனர் இரண்டுவருட காலத்திற்கு உத்தியோகம் பார்க்கலாம். குறித்த இரண்டு வருடகாலத்திற்குப் பின் கமிஷனர் விஷயமாக எவ்வகையான ஒழுங்கையும் செய்வதற்குக் கோட்டாருக்கு அதிகாரமுண்டு.

நீதிபதி கூறிய குறிப்பு.

சென்ற ஏழு வருடகாலமாகக் குறித்த கோயில் அதிகாரி வழக்கு விஷயமாக ஆயிரம் ரூபா வரையில் வீணே செலவு செய்திருக்கிறார். அத்தப் பணத்தினும் பார்க்க வேதனமாக அல்லது சம்மானமாகக் கொடுக்கும் பணம் அதிக கண்மையைத் தரத்தக்கது. அவர் கேர்மையுள்ளவராக இருந்தால் வரவு செலவுக் கணக்குகளை வெளிவிடுவதற்கும் தான் வைத்துவரும் கணக்குகளைப் பிறர் சரி பார்க்க விடுவதற்கும் பின் நிற்கமாட்டார். தாங்கள் கோயிலுக்குக் கொடுக்கும் பொருள் எவ்வாறு செலவு செய்யப்படுகின்றதென்பதை அறிதற்கான அதிகாரம் ஊரவர்களுக்கு உண்டு.

ஊரவர்களுள் அநேகர் இக்கோயிலைக் கட்டவேண்டும், புதுப்பித்தல் வேண்டும், என்னும் எண்ணமுடையவர்களாக இருத்தலினால் பலர் ஒரு சபையாகத் திரண்டு பணஞ் சேர்த்து அப் பணத்தைக் கோயில் நன்மைக்காக எங்ஙனஞ் செலவு செய்யலாம் என்பதைக் கோயிலதிகாரியுடன் யோசித்துச் செலவிடலாம். அங்ஙனஞ் செய்யின் செலவைக் கட்டுப்படுத்துவதற்கும் ஊரவர்களுக்கு அதிகாரமுண்டு.

மேற்படி கோயிற் பரிபாலனமுறையை எவ்வாறு நிர்வகிக்க வேண்டுமென்பதை விட்டு எதிரிகள் எவ்வகையான வழியையும் எடுத்துக் காட்டாமையினால் பிரதிவாதிகளே இவ் வழக்கில் வாதிகளின் வழக்குச் செலவை இறுத்தல் வேண்டும்.

—இந்து சாதனம்.

பொதுச் சமாச்சாரம்.

காலநிலை.

காற்று உரமாக வீசுகின்றது. வெய்யில் அகோரமும் குறைந்தபாடில்லை. மாதுபானிகளின் கூத்து எங்குமதிகம். இடையிடையே காச்சல் முதலிய ரோகங்களு மிருக்கின்றன.

ஸ்ரீ. கதிரைமலைப் பெருமாளின் சந்நிதானத்தில் நம்மவர்க்காய் தொடங்கி நடைபெற்றுவரும் மடாலய தருமத்திற்காக சுவாமி நாகப்பன் வசமாக இம்மாசம் பொருளுபகரித்தவர்களின் பெயர்களாவன. (1) ஸ்ரீ. P சினித்துரை P W D ஓவசியர் பூண்டுலோயா ரூபா 60.00; (2) ஸ்ரீ. K. வைரமுத்து ஓவசியர் நம்பொடை ரூபா 75.00 (3) E. சிதம்பரப்பிள்ளை M. D. B. இன்ஸ்பெக்டர் மலாய் நாடு சின்னான் ரூபா 20.00; ஆகத் தொகை 155.00.

ரூஷியா தேசத்தில் 20லட்சம் சோம்பேறிகள் வீதிகளில் திரிந்துகொண்டிருக்கின்றனராம். மாஸ்கோ நகரில்மட்டும் இருபத்தையாயிரம் சோம்பேறிகள் இவ்விதம் வெட்டித்தனமாக காலங்களிக்கின்றனராம்.

உலகத்தில் மிகப்பெரிய கட்டிடம் சிக்காகோ நகரத்தில் கட்டப்படும். இது எழுபத்தைந்து மாடி கொண்டதாயிருக்கும். இதன் உயரம் 1022அடி இருக்கும். இதன் கீழ்த் தளத்தில் ஆயிரம் மோட்டார் வண்டிகள் விட்டு வைப்பதற்குப் போதிய இடமிருக்கும்.

மனைவியை விடுத்து அழகிய ஒரு ஸ்திரியிடம் செல்ல விரும்பும் ஓர் ஆடவன் தன் மனைவிக்கு எப்படித் துரோகம் செய்திருக்கிறானோ அப்படியே தன் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சாமான்களைப் புறக்கணித்து அந்நிய நாட்டுச் சாமான்களை உபயோகின்றவன் தன் தேசத்திற்குத் துரோகியாகிறான். ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் அந்நாட்டு மக்கள் சுதேசிச் சாமான்களை உபயோகிப்பது மிகவும் அவசியமாகும் என்று மஹாத்மாஹாந்தி கூறுகிறார்.

நாற்றிசை நோக்கு.

உன்னதமானநாகரீகம்.

அமெரிக்காவில் ஓர் ஐரோப்பியமாதைத் தாக்கினானென்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்த ஒரு நீக்ரோ வாலிபனை டென்னிஸ் நகரவாசிகள் ஏராளமாகக் கூடிப் பலாத்காரமாகச் சிறைக்கோட்டத்திற்குள் புகுந்து அவனைப் பிடித்துத் தாங்களே அவனைக் குற்றவாளியென்று முடிவு செய்து அவனை அடித்து வதைத்துக் கொன்று பிரேதத்தை ஒரு மரத்தில் கட்டிவிட்டார்களாம். இதுதான் அமெரிக்காவின் நாகரீகமாம்.

திமிங்கில வேட்டை.

பாக்லண்டு தீவில் திமிங்கிலம் வேட்டையாடிய பொழுது ஒரு திமிங்கலம் ஒரு மனிதனை எடுத்து விழுங்கிவிட்டதாம் மறு நாள் திமிங்கிலத்தை பிடித்துக் கொன்று பார்த்தபோது வயிற்றில் அம்மனிதன் உயிரோடிருந்தானும். ஆனால் சிறிது மதிமயங்கிப் போயிற்றாம். அவன் புத்தி தெளிந்ததும் கூறியதில் திமிங்கிலம் வயிற்றில் சுகமாக மூச்சுவாங்கி உயிரோடிருக்க முடியுமென்றும், ஆனால் அதன் வயிற்றிலுள்ள காற்று நெருப்புப் போலிருக்கிறதென்றும் அதை அவர் ஒரு சிறைச்சாலையாகக் கருதியதாகவும் கூறுகின்றனராம்.

ஒரே மூச்சில் ஐந்தடி தாண்டினாள்.

சரீரப் பயிற்சியிலும் சரீர வலிமையிலும் வட அமெரிக்காவிலுள்ள கனடா பிரதேச மாதர்கள் முதன்மையாயிருக்கிறார்கள். சமீபத்தில் மாண்ட்ரீல் நகரில் தேகாப்பியாசப் போட்டிப் பந்தயமொன்று நடைபெற்றதாம். அதில் மிஸ். எத்தெல் எனும் 16 வயது மடந்தை ஒரே மூச்சில் ஐந்தடி தாண்டினாள். மிஸ். மர்ட்டிஸ் என்னும் மற்றோர் மடந்தை ஆறு விநாடியில் 50 கஜதூரம் அம்புபோற் பாய்ந்தோடினாள். இவ்வளவு வலிமையும் சாதுரியமும் இவ்விள வயசில் எம்மாதிடத்தும் கண்டதில்லை யென்றே சொல்லவேண்டும்.

சலங் கட்டியாகின்ற விநோதம்

ஆறு புட்டி சலம் பிடிக்கும் ஒரு கல்சாடியில் நான்கு புட்டி சலத்தை நாலு தடவை துணியினால் வடிகட்டி மெல்லியதாய் அரைத்து 2 அவுன்ஸ் வெடி உப்பை அச்சலத்தில் போட்டு சாடியின் வாய்க்குச் சரியான ஒரு அடைப்புப் போட்டுக் காற்று உள்ளே புகாமல் அடைத்து இந்தச் சாடியை வாய்ப் பக்கம் மேலே நிற்கும்படி ஒரு கயிற்றினால் கட்டி ஆழமான ஒரு கிணற்றில் விட்டுத் தண்ணீர்க்குள் அமிழ்த்தி பிறகு தண்ணீரில் மேல்மட்டம் வரையில் தூக்க வேண்டும். இவ்வாறு செய்து கொண்டிருந்தால் 3அல்லது 4மணி நேரத்தில் சாடியிலிருக்கும் சலம் உறைந்து கட்டியாய்விடுமென ஒருவர் எழுதித் தெரிவிக்கின்றார்.

ஓர் மாதின் வீரச்செயல்.

காமாரெட்டி தாலுக்காவில் கூடலியென்ற ஒரு பெரிய க்ஷேத்திரம் உண்டு. சில வாரங்களுக்கு முன் ஒரு வாலிபக் குடியானவனும் அவன் மனைவியும் வீட்டிலிருந்து புறப்பட்டு பெண் வீட்டிற்குப் போகும்வழியில் கூடலிக்கு வந்தார்கள். அப்போது நெடுநேர மானதால் அவ்விடத்தில் சாப்பிட்டுக்கொண்டு போவதாக நிச்சயித்தார்கள். அங்குள்ள நதியில் தண்ணீர் நிறைந்திருந்தது. அந்த ஸ்திரி கரையில் ஒரு புளியமரத்தடியில் உட்கார்ந்து கொண்டாள். புருஷன் நதியில் இறங்கி முகம் கழுவிக்கொண்டிருந்தான். அவ்விடத்தில் மனுஷசஞ்சாரம் அப்போது இல்லாமலிருந்தது. அதற்குள் ஒரு முகமதியன் கையில் கத்தியெடுத்து கண் இமைப் பொழுதில் அந்தப் புருஷனுடைய சிரசைத் தண்டித்து அந்த ஸ்திரியைப் பலாத்காரம் செய்ய ஆரம்பித்தான். அந்தம்மாள் தைரியத்தைச் சிறிதுமிழக்காமல் அவனின் எண்ணத்திற்கு இசைவதாகக் கூறி முதலில் அந்தப் பிரேதத்தைஅடக்கம் செய்யாவிட்டால் மனது சாந்தப்படாது என்று அவனிடம் சொன்னாள். அவன் அந்த வார்த்தைகளை நம்பி கத்தியைக் கீழே வைத்து மணலில் குழி தோண்ட ஆரம்பித்தான். அந்தம்மாள் கூட கொஞ்சநேரம் அவனுக்குச் சகாயமாய் மணல் தோண்டுவது போல் நடித்து சமயம்பார்த்து அந்தக் கத்தியை எடுத்து ஒரே வெட்டில் புருஷனைக் கொன்றவன்சிரசை வெட்டிவிட்டாள். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் வந்து அந்தம்மாளின் தைரியத்தைக்கொண்டாடி அப்பெண்மணிக்கு வெகுமதி யளிப்பதற்காக ஐதராபாத்துக்கு அனுப்பினார்கள்.

கூண்டில் அடைபட்டிருந்த பெண்.

பவநகர் சமஸ்தானத்தைச் சேர்ந்த சனுகானு என்னும் கிராமவாசியும் பெருஞ் செல்வந்தனுமான ஒரு மிராசுதார் தன் மனைவியை இரண்டரை அடி அகலமுள்ள குறுகிய கூண்டில் இரண்டு வருடங்கள் வரை அடைத்துவைத்திருந்து பிறகு ஐந்துவருடங்களுக்கு அப்பெண்ணுக்குக் கை கால்களுக்கு விலங்குச் சங்கிலி போட்டு வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் பவநகர் செஷன்ஸ் நீதிபதி அப்பாதகக் கணவனுக்கு மூன்று வருடக் கடுங்காவல் தண்டனையும் 750 ரூபா அபராதமும் விதித்தார். அத்தகைய கொடுமைக் குட்பட்ட மங்குபாய் என்னும் அப்பெண் நீதிபதிமுன் சாட்சியம் சொல்லுகையில், கர்ப்பமாயிருந்த தன்னைத் தன் கணவன் இரண்டரை அடி அகலமுள்ள கூண்டிலடைத்து வைத்து ரொட்டித்துண்டுகளும் நாளொன்றுக்கு நாற்பது அவுன்ஸ்தண்ணீர் மட்டும் கொடுத்து வதைத்ததாகக்கூறினாள். அப்பெண் கூண்டிலடைக்கப்பட்ட நான்கு மாதத்திற்குப்பிறகு ஒரு குழந்தையைப் பிரசவித்தாள். அக்குழந்தையும் தாயுடன் அக்கூண்டில்தான் அடைக்கப்பட்டுக் கிடந்தது. பின்னர் அப்பாதகக் கணவன் அப்பெண்ணைக் கூண்டைவிட்டு வெளிப்படுத்திக் கை கால்களுக்கு விலங்குச் சங்கிலிகள் பூட்டி வைத்தான். இவ்வாறு அவன் அப்பெண்ணை ஐந்து வருடங்களாக விலங்கிட்டு வைத்துப் பெண்ணின் பெற்றோரை அவளைப்பார்க்க அனுமதிக்கவேயில்லை. முடிவில் அப்பெண்ணைச் சமஸ்தான பொலிசார் அப்பாதகனிட மிருந்து விடுவித்தனர். அப்பெண்ணைப் பெற்றோரிடம் கொண்டு போனபோது அவள் இரண்டுவருடம் கூண்டிலடைபட்டும், ஐந்தாண்டு விலங்கிட்டு மிருந்த கொடுமையால் கால்கள் நடக்க உதவாமல் போய்த் தூக்கிக்கொண்டு போக வேண்டியதாயிருந்ததாம்.

உப்புச் செய்கை.

(ஒருவர் எழுதி யுதவியது)

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகக் கொள்ளப்படுவது நல்ல காற்றும், தண்ணீரும், ஆகாரமுமாகும். இம்மூன்றினுள்ளும் செறிந்திருப்பதாயும் முக்கியமாக ஆகாயத்துடன் கலக்கப்படவேண்டியதாயுமிருக்கின்ற சரக்கு உப்பு ஒன்றுதான். பதார்த்தம் எதற்கும் நல்ல ருசியைக் கொடுப்பதும் இந்த உப்பே. உப்பு இல்லாது சீவ இராசிகள் பிழைத்தலரிது. உப்பின் அவசியத்தைப் பற்றி யாருமறிவர். எப்படிப்பட்ட ருசியான ஊறுகாய் பாகம் செய்தபோதிலும் அதற்குத் தக்க உப்புச் சேராவிடில் அது சில தினங்களுக்குள் புளுத்துக் கெட்ட மணம் உண்டாகிவிடும். உப்பு, பொதுவாகச் சாதி மத வித்தியாசங்களையும், பணக்காரன் ஏழை என்னும் வித்தியாசங்களையும் பாராமல் மக்களனைவருக்கும் உதவி செய்கின்றது. இவ்வித அத்தஸ்தை உடைய உப்பை மக்கள் மிக அலட்சியமாகக் கருதுகிறார்கள். அதிலும் சமையல் செய்வோர் ஏதேனும் ஒரு பதார்த்தத்தில் சேர்ப்பதாக ஒரு பிடி உப்பை எடுத்துச் சிறிது பதார்த்தத்திற் சேர்த்த பின்னர் மிகுதியான உப்பைப் பத்திரஞ் செய்வதில்லை இதற்குக் காரணம் யாது? உப்பு மிகவும் குறைந்த விலைக்குக் கிடைப்பதுதான். உப்பின் விலை குறைவாக இருந்தாலும் உப்பிலிருந்து அரசினருக்குக் கிடைக்கும் வருவாயோ மிகவும் அதிகம்.

உப்பைப்பற்றிப் பலரும் அறிந்து கொள்ளாததற்குக் காரணம் யாதெனில், பல சாமான்களையும் செய்வதற்கெனத் தொழிற் சாலைகள் இருப்பதே போல் உப்பை உற்பத்திசெய்வதற்காகச் சாலைகள் ஒன்றுமில்லாததேயாகும். அரசினர் தங்கள் பார்வையில் உப்பு உற்பத்தி செய்யுமிடங்களெல்லாம் இயற்கையிலேயே ஈரம் படிந்த தறையாகவும், உப்புச் சலம் நிறைந்த இடமாகவும் இருக்கின்றன. உப்பு எடுப்பதற்கேற்ற சுரங்கமாக இருப்பது சமுத்திரமேயாகும். உப்புநீரை ஆவியாக்கவேண்டியதுதான் முக்கிய தொழில். உப்பின் உற்பத்தியை அரசினர் தங்கள் அதிகாரத்தில் வைத்துக்கொண்டிருப்பதால் வேறு யாரேனும் உப்பைச் செய்தால் அது சட்டவிரோதமாகவும் அதிக குற்றமாகவும் கருதப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள்.

உப்புச் செய்யப்படும் இடங்களெல்லாம் இயற்கையாகவே களிமண் பாப்பாக இருக்குமாதலின் அதை உழவர்கள் பாப்படிப்பது போன்ற ஓர்வகை ஆயுதத்தால் கன்றாகச் சமப்படுத்திவிட்டு அப்பாத்தியாம் கிலப்பாப்பின்மீது சமுத்திரத்தினுள்ள உப்புச் சலத்தைக் கொண்டுவந்து ஊற்றுவார்கள். சிற்சில இடங்களில் உப்புநீர் ஊற்றே கிளம்பி வருவதுமுண்டு. அவ்விடங்கள் விசாலமானவையாகவும் திறந்த வெளியாகவும் இருப்பதால் அங்கு ஊற்றிய உப்புநீர்களிலுள்ள சுத்தமான தண்ணீர் ஆவியாய்ப் போய்விடுவதினால் உப்பு மட்டும் அப்பாத்திகளின் மீது பளிங்கு போற் படிந்துவிடுகின்றது. வெயிற்காலத்திற்றான் அதிகமான உப்புச் செய்யப்படுகின்றது. உப்பு, பளிங்கு போல் உறைந்து கெட்டியாக ஆவதற்கு மூன்று முதல் ஏழு நாட்கள் வரை செல்லும் பின்னரும் அது பழுப்பதற்காகச் சில நாள் அப்படியே விட்டு வைப்பார்கள். இறுதியில் யாவையும் ஒன்றாய்த் திரட்டுவார்கள்.

சாதாரணமாக உப்பு, பனிக்கட்டியைப்போல் வெண்மையாக இருக்கும். ஆனால் சிற்சில சமையங்களில் கிலப்பாப் பின் நிறத்துக்கேற்ற விதமாக ஏதேனும் மங்கல் நிறத்தையும் பெற்று விடுவதுமுண்டு.

உண்மையை உணரவேண்டியது மக்களின் கடமை.

எல்லாம் வல்ல இறைவன் மக்கள் உய்யும் பொருட்டு மக்களிருக்கு மிடந்தோறும் உண்மைகளை வெளியிட்டிருக்கிறான். அவன் எங்கும் நிறைந்த பொருள். அவனருளிய உண்மைகளை அறிய முயல்வது மக்களின் இயற்கையும் கடமையுமாகும். அவ்வண்ணம் முயலுவோருக்கு, கடவுள் அவரவர்களுடைய மனத் தோற்றங்களின் படியே உருவம் காண்பித்து அவர்க ளறிந்திருக்கும் பாஷையிலே உண்மையை உணர்த்தி அவரவர் தத்துவத்துக் கேற்ற ஞான அமுது ஊட்டுகின்றான். உண்மையை உணர நாடுபவன் எவனும் அதனை உணராதிருப்ப தில்லை. இக்காலத்திலே உலகிற் பெரும்பாலார் தாம் அவலம்பித்து வருவதாகக் கூறும் கிறீஸ்து மதத்தில் எத்துணை உண்மை என ஆராய்வோம்.

கிறீஸ்து யூதசாதியாருக்குள் பிறந்து அவர்களுக்கே நல்லுபதேசம் புரிந்தவர். அவ்யூதர்கள் அவர் கூறிய சன்மார்க்க போதனைகளை ஒத்துக் கொண்டார்களில்லை. அவருடைய காலத்திற்குப்பின் கிறீஸ்தவமதம் ஆரம்பித்தது; அவருடைய தொண்டர்களும் பெருகினர். கடைசியாக இக்காலத்திலே மேல் நாட்டவர்களும் அவர்களுடைய பிரிவினர்களும் தங்களைக் கிறிஸ்தவர்களெனக் கூறிக் கொள்கின்றனர். ஆனால் இக்காலத்தில் மேனாட்டுச் சனங்களைக் கிறிஸ்தவர்களெனக் கூறுவது வெறும் மரியாதைப் பேச்சாகும்

கிறித்தவ மதம் தொடங்கிய நாள் முதல் உண்மையாகவே அவரைக் கடவுளின் அம்சமெனவும் அவதாரபுருஷரெனவும் நம்பினவர்கள் பலர் உண்டு. இவர்கள் தம் குருவாகக் கொண்ட கிறிஸ்துவினுடைய சீவிய சரித்திரத்தைப் பக்தியுடன் தியானம் செய்தனர்.

அவருடைய அதிசயப் பிறப்பையும், அமானுஷ்யச் செயல்களையும் சாதாரண மரிப்பையும் உண்மையெனநம்பின அவர்கள்உண்மைப் பக்தியுள்ளோர்க்குச் சர்வவல்லமையுள்ள கடவுள் எப்போதும் காட்சி கொடுப்பான் என எண்ணினர். கிறிஸ்து ஏழைக் குடும்பத்திலே பிறந்து எல்லாவற்றையும் துறந்து அன்பையே கைக் கொண்டொழுகியவர். அவருடைய சிஷ்யர்களும் அவரைப் போலவே வாழ்தல் தகுதியெனத் தீர்மானித்தனர். கடவுளையும் அவருடைய பிரியகுமாரரான கிறிஸ்துவையுமே ஆதாரமாகக்கொண்ட இவர்கள் பக்திசெய்வதற்கு மண், பெண், பொன், ஆகிய மூன்றும் தடையெனத் தீர்மானித்து, அவைகளை வெறுத்துத் துறவிகளாகிக் காலங்களித்தனர். இவர்கள் பக்தி மார்க்கம் கர்மமார்க்கம் ஆகிய இரண்டையும் கடைப்பிடித் தொழுகி மடங்கள்தாபித்து, சிலர் தம் சரீரத்தால் உழைத்தும் சிலர் இரந்தும் கிடைத்தவற்றை யுண்டு எஞ்சியதைத் தருமஞ் செய்துவந்தனர். ஐம்புலன்களை ஒருவழிப்படுத்திய போது தான் மனம் கடவுளின் மீது செல்லு மென்பதை யறிந்து அவற்றை ஒரு வழிப்படுத்துவ தற்காய்ப் பட்டினி கிடப்பதும் தரையில் படுப்பதும், முரட்டுத் துணிகளைத் தரிப்பதும், உலைத்தடியாலும் சவுக்காலும் அடிப்பதும் இவைகளைச் செய்து வந்தனர் இவ்வாறு செய்து எக்காலமும் கடவுளைத் தொழுது வந்த இத்துறவிகள் உயர்ந்த பக்தர்களாயினர். இவர்களிற் சிலருக்கு கிறிஸ்துவும், கடவுளும் தரிசனங்தந்தனரென இவர்களைப் பற்றிய கிரந்தங்கள் கூறும். இதனுண்மைப் பாதர் மனப்படித் தோன்றும் கடவுள் இவர்கள் முன்னே தோன்றி யிருக்கலாம் என்பதைச் சந்தேகிக்க இடமில்லை. (வரும்.)

உண்மைவிரும்பி

சாதிபேதமும் ஆலயதரிசனமும்.

(சம்பாஷணை.)

(அல்வாய்ப் பள்ளன் எழுதியது)

சதாசிவம்: நீ இப்போது எங்கே படிக்கிறாய்?

கணபதி: ஐயா, யான் எங்கள் சைவவித்தியாசாலை ஒன்றிற் படிக்கிறேன்.

நீங்கள் எங்கே படிப்பிக்கின்றீர்கள்?

ச: நான் சைவக் கல்லூரி யொன்றிற் கற்பிக்கிறேன். இது நிற்க, நீ இடையிடையே இக்கோயிலுக்கு வருவதும், தவிர்தலுமாய், இருக்கின்றாயே. காரணமென்னை?

க. ஐயா, ஆலயத்திலே செய்யும் வணக்கம் எனக்கு அவ்வளவு திருப்தியையும் கவர்ச்சியையுந் தராமையினாலே சில சமயங்களில் யான் இங்கு வாராதொழிவது முண்டு.

ச. கணபதி "அவ்வளவு திருப்தியையுங் கவர்ச்சியையுந் தருவதில்லை." என்ற உன் கூற்றினாலே கோயிலுக்குள்ளே போகக்கிடையாத காரணமே உன்னை ஆலய வணக்கத்தில் ஊக்குகின்றிலது என ஊகிக்கப்படுகின்றது. இதைப்பற்றிக் கூறுகின்றேன் சற்று ஆறுதலாய்க் கேள் இங்குள்ள சைவர்களுட் சிலரும் அந்த இந்தியருட் சிலரைப் பின்பற்றி "ஆலயத்துள்ளே சாதிபேதத்தைநோக்காது எவரும் போகலா"மென இயம்புகின்றனர். அந்தோ! இவர்கள் அறியாமை இருந்தபடி என்னே? அந்த அரிபிரமதேவர்களுந் தேடிக் காண்டற்கரிய கடவுளாகிய சிவன் இருந்தருளும் ஸ்தலத்தைச் சாமானிய இடம் போல் மதிக்கலாமா? அன்றியும் மாமிசம் புசித்தல், மதுக்குடித்தல், கொலைசெய்தல் முதலாம் இழிந்த கருமங்களை இயற்றுகின்ற தாழ்ந்த சாதியினரைக் கோயிலுக்குள்ளே விடலாமா? நான் ஸ்நானஞ்செய்த பின்னர் அங்ஙனஞ் செய்யாதானொருவனைத் தீண்டினாலும் உள்ளேபோக ஒருபோதும் ஒருப்படேன்.

மேலும் உள்ளே போனாற்றான் மோக்ஷங் கிடைக்குமா? நந்தனார் எங்கே நின்றார்? ஈற்றில் எக்கதியிற் சென்றார்? அன்றியுஞ் சுவாமியைக் கிட்டக் கிட்ட அன்பும் அவாவுங் குன்றும். எட்ட எட்ட இவை விருத்தியாகும். ஆதலின் வெளியே நின்றாலென்ன உள்ளே புகுந்தாலென்ன அதிலொன்றுந் தங்கவில்லை.

க. ஒல்காப்புகழுடைத் தொல்காப்பியரும், எந்நூலாரும் போற்றுகின்ற நல்நூலாருங்கூறிய நல்லாசிரிய இலக்கணங்களுள் ஒன்றாகிய துலாக்கோலன்ன பண்புநிறைந்த ஐயா 'காய்வதன்கண் உற்ற குணமும்' உவப்பதன்கண் குற்றமுந் தோன்றா' தென்ற ஆன்றோர்வாக்கை ஆய்ந்து 'காய்தல் உவத்தல் அகற்றி' யான் சொல்வனவற்றையுஞ் சிறிது செவியில் விழுத்துங்கள். ஐயா பிரமவிஷ்ணு என்னுந் தேவர்களுந் தேடமுடியாத பெருமை வாய்ந்தவன் அந்தச்சிவன் என எடுத்துக் கூறினீர்களே. இந்தச்சிவன் முன்னொரு ஞான்று இழிந்த பன்றியுருவாக வில்லையா? மண்சுமக்கும் மள்ளனாய் (ஒட்டனாய்) வரவில்லையா? ஆதலினால் இறைவன் பெரியனுமல்லன் சிறியனுமல்லன்.' அவன் எந்நிலையுமெய்துந் தன்மையனன்றோ.

இனி, நீங்கள் ஸ்நானஞ் செய்யாத ஒருவனைத் தீண்டினாலுங் கோயிலுக்குள்ளே போவதில்லை எனக் கூறினீர்களே அப்படிப் போனால் உண்டாகுந் தீமை என்ன? தயை செய்து உரையுங்கள்.

ச: அங்ஙனஞ் செல்வதற்கு என் மனம் உடன்படாது.

க: ஐயா உங்களுக்கு அந்நிலையுடன் போகவிருப்பமில்லை. ஆயினும் இன்னொருவனுக்குத் தான் குளியாவிடினும் உள்ளே ஏக உள்ளமொப்புகின்றது. ஆதலின் அத்தகையோன் உட்புகலாமல்லவா?

ச: ஆமாம்! அதுசரி யான் பராமுகத்தாற் சொல்லி விட்டேன். உள்ளே யான் போகாதிருப்பது ஆலயத்திற்கு ஆசௌசமேற்படுமென நினைந்தேயாகும்.

க: ஐயா "அரிது அரிது மானுடராதலரிது" எனவும் "பெரிய ஜென்மங்கள் பிழைத்திவண் மானுடம் பெறலரிதே" எனவும் சிறப்பித்துக் கூறப்பட்ட ஒருவனைத் தீண்டிய பின் உள்ளே போனால் ஆசௌசம் உதிக்குமென உரைத்தீர்களே! புன்மலத்தையும் உச்சிட்டங்களையும் இன்ன பிறவற்றையும் புசித்து ஸ்நானமுஞ் செய்யாது வாழுகின்ற நாய், பறவை, முதலிய இழிந்த பிறப்புக்கள் கோயிலுக்குள்ளே நாடோறும் போகின்றனவே! அதனால் அங்கே ஆசௌசம் உதியாதா!! சுவாமியொடிவிடுமா!!! பிராயச்சித்தம் நிகழுகின்றதா.

இனி, பள்ளர் நழுவரை உள்ளே விடாதது அவர்கண் மாட்டுப் புலால் புசித்தல் மதுபான முதலியன இருக்கின்றபடியால் என்கிறீர்களே. அம்மம்ம!! உள்ளே செல்லும் பல்லாயிரவர் மாமிசம் புசிப்பவராயும் சாதி பேதம் பாராது பிறர்மனை நயப்பவராயும், வெளியே நிற்கும் அவரிடத்துள்ள நீரும் பிறவுஞ் சேர்ந்த கள்ளைக் கொடுப்போர் கைமேலும் வாங்குகின்ற (உயர்சாதியினராகிய) இவர்கள் கால்கள் சீழுமாய்ப் பற்காட்டி நாறாது பெற்றுக் குடிப்பவராயுங் காணப்படுகின்றனரே. இவர்கள் எச்சாதியினராவாரோ, வெளியே நிற்கும் எத்தனை பேர் புலையுங் கொலையும் பிறவுந் தவிர்த்து ஆசாரமுடையராய் வாழ்வதை நீங்கள் அறியவில்லையா. மேலும், உள்ளே போனால் மோக்ஷங்கிடைக்கும் என்ற எண்ணம் வெளியே நிற்கும் அவர்கள் பாலன்றி உள்ளே செல்லும் உயர்சாதியினரிடத்தும் இடையிடையேயுண்டு, அஃது தப்பாகும். ஆனால் வெளியே நின்று வெயிற் காலத்திலும் மழை நேரத்திலும் வணங்கலாமா என்பதுதான் பரிதாபமான வினாவாகும். அவ்வணக்கம் இறைவன் மீது செல்லுமா. சீவகாருண்யம் இருக்க வேண்டுமெனக் கூறுஞ் சைவர்கள் ஒவ்வொருவரும் இதையிட்டு மனங்கசிய வேண்டாமா? இக்காரணங்களினாலே யான் இடையிடையே கோயிலுக்கு வருவதில்லை. இப்படியானோர் இன்னும் பலர் இருப்பர்.

இன்னும், ஏக் கருமத்துக்கும் இடம், பொருள், ஏவல், என்னும் மூன்றும் வேண்டப் படும். இவற்றுள்ளே முதற்கணிநீ இய இடம் என்பது ஆலயத்திலே உசிதமுறக் கவர்ச்சிபெற வாய்க்காவிடின் அஞ்ஞானத்திற் கட்டுண்டு கிடக்கும் ஆன்மா அங்குச் செல்ல உடன் படுமா? அஞ்ஞானிகள் பொருட்டாகவே ஆலயம் அமைக்கப்படுவது அன்றியும் வணங்கச் செல்லும் ஒவ்வொருவரும் அங்கிருக்கும் விக்கிரகத்தைக் காணுங் கடப்பாடுடையர். அவ்விலிங்கத்தை வெளியே நிற்போர் காண்டல் அரிதினுமரிது அப்படியாயின் வணக்கஞ் சிறப்பாமாறெவ்வாறு? விக்கிரக வணக்கத்தின் உண்மையான இலட்சியந் தானென்னே.

இனி, வெளியே நிற்பது நல்லதென எங்கட்சி யியம்புவது போல உள்ளே செல்லும் வேளாளர் முதலிய சாதியினர்க்குத் தயை செய்து நீங்கள் உரைக்கவேண்டாம். அங்ஙன மறைந்தால் அவர்கள் அதுவே சிறந்ததென வெளியே வருவர். வந்தால் நாங்கள் இப்போது நின்று வணங்குமிடம் அவர்களுக்குரித்தாக நாங்கள் இன்னும் 200, 300யாருக்கப்பாலே போகவேண்டியவராவோம். அப்போது தீப முதலியவற்றையுங் யாந் தரிசிக்க மாட்டோம். அதனால் ஆலயத்துக்கேன் போவான். வீட்டிலிருந்து வணங்கலாந்தானே என்ற மூட எண்ணம் விருத்தியாகும்.

மேலும், நந்தனார் வெளியே நின்று முத்தியடைய வில்லையா! என்றால் உள்ளே போகின்ற இலட்சக்கணக்கானவருள் ஒருவரேனும் உள்ளே சென்று வணங்கி முத்தியடைந்த வேளாளராகிய திருநாவுக்கரசு சுவாமிகளைப் போல இன்னுங் காணப்படாமலிருந்தால் வெளியே நின்ற நந்தனாரைப் போலவே நாங்கள் யாவரும் வெளியே நிற்க வேண்டும் வரவேண்டும் எனக்கூறல் பொருத்தமாகுமா? மிக்க அரிதினுமரிதாய் ஒழுகிய ஒருவரைப்போல் யாவரும் வாழ்ந்து அவர் கொள்கை முழுவதையும் பின்பற்றலாமெனின் உலகிலே பாவமென்பது இல்லாமற் பறந்து விடுமன்றோ? பள்ளர்தானே இவர்கட்கு ஒன்றுந் தெரியாதென நினைத்து இங்ஙனங் கூறுபவர் இன்னும் பலருளர்.

ச: போனது போகட்டும் கணபதி நஷ்டப்பட்டார்றானே நன்மை யடையலாம். வெயில், மழை முதலியவற்றைத் தாங்கி இறைவனை வணங்குதல் சிறப்புடைத்தாகும். அன்றியும் கர்ம வசத்தாலே இந்தத் தாழ்ந்த சாதியில் உதித்தீர்கள். கல்வியால் உயர்ச்சி அடையலாம் எதற்கும் ஆறுதல் இருக்கவேண்டும்.

க. ஐயா நமஸ்காரம்!! நன்மைபெறுவதற்கு வீணாய்ப் பிரயாசப் படலாமா? மூக்கைத் தொடுவதற்குப் பிடர்ப்பக்கமாகக் கையைச் சுற்றலாமா? கையாற் கிழிக்கும் பனங்கிழங்கிற்கு ஆப்பும் வல்லூட்டுக் குற்றியிம் எடுக்கலாமா? அன்றியும், எவ்வளவு கஷ்டப்பட்டாலுங் கடவுளையே வணங்க வேண்டுமென்ற மேலான உணர்ச்சி பாசபந்தத்திற் கிடக்கும் ஆன்மாவிடத் துதித்தல் அரிதாகும். அத்தகைய உந்த அறிவும் ஆலய வழிபாட்டிற் பல்காற் சென்று கொண்டிருப்பதே உதிப்பதாகும்.

மேலும், படிக்க வேண்டும் படித்தால் உயர்ச்சி அடையலாம் என்று சொன்னாற் போதாதா உள்ளே செல்பவர் எல்லாரும் படிப்பினாலே தான் உயர்ந்திருக்கிறார்களா? இடமிருந்தாலன்றோ கற்பதற்கும்மனமேவும் பொருட் கல்வியோடு தான் ஆன்ம லாபந் தருங் கல்லியையுங் கற்கலாகும். ஆன்மலாபந் தருங் கல்வியை யாம்பெற விரும்பின் சைவரது கல்விக் கழகங்களிலேயே படித்தல் வேண்டும். அதற்கு எங்கள் சைவாபிமானிகள் இடந்தருவார்களா? இல்லை. ஆயினுங் கிறிஸ்தவர் இடந்தருவர். அவர்களது கல்வி ஸ்தாபனங்களிற் சென்று யாம் படிப்பின் எமது சமயஞானமும் ஆலயவழிபாடு முதலியனவும் எப்படியாகு மென்பது உங்களுக்கே விளங்கும். சமயபாடத்துடன் சம்பந்தமடையுங் கல்வியே வாழ்க்கையைத் தூய்மையின் பாற்படுத்த வல்லது. அத்தகையகல்வியைத் தத்தஞ் சமய வித்தியாசாலைகளிலன்றோ பெறலாகும். உங்களைப் போன்றார் போதிப்பதைச் சாதனையிற் கொண்டுவரும் வரைக்குஞ் சைவப்பள்ளர் முதலியோர் சைவக் கல்லூரிகளிற்கற்றல் முயற்கொம்பை ஒக்கும் எனினும், இந்தியாவிலே மிலேச்சரெனக் கூறப் படுகின்றவரும், ஆலயத்துள்ளே விடாது தடுக்கப் படுகின்றவருமாகிய ஒரு சிலரின் கட்டளைக்குப் பயந்தாயினும் இனி ஒருபோது யாவரும் எக்கல்வி ஸ்தாபனங்களிலுங் கற்கிறகாலம் வருமெனக் கூறலாகும்.

இன்னும், "கிறிஸ்தவர் தமது மார்க்கத்திற் சேர்ப்பதற்காகவே தாழ்ந்த சாதியினரைத் தங்கல்லூரிகளிற் புகுத்துகின்றனர்." என்று சிலர் கூறுவர். அவர்களுக்கிருக்குஞ் சமயாபிமானஞ் சைவர்பாட்டும் இருந்தால் அவர்களுந் தங்கலாசாலைகளிலே யாவரையுங் கற்கவிடலாமே. சைவரிடத்திருப்பது (இது காரணமாய்ச்) சாதியபிமானமே சமயாபிமானம் போதனையனவிலே—பத்திரிகையனவிலே நின்று விடும்.

இனி, கர்மத்தால் இந்தத் தாழ்ந்த சாதியிற் பிறந்தீர்கள் என்றீர்களே. ஐயா படிப்பிலே விருப்பற்றிருக்குந் தாழ்ந்த வகுப்பு மாணவர்க்குச் சித்திரமாதியாய நூதனங்களைக் காட்டி ஏற்றதுணைக்கருவியுடன் அவாவையூட்டிக் கற்பித்தல் போலக் கர்மத்தினாலே தாழ்ந்த வகுப்பிலுதித்த அவர்களுக்கும் ஆலய முதலியவற்றிலே அவர்களை வணக்கத்திலே ஊக்கத் தக்க இட வசதி விக்கிரக காட்சிக் கவர்ச்சி முதலியன உசித முற அமைந்தாலன்றோ அவர்களுக்கும் அந்நெறியில் அவாவேறும். மானுடப் பிறப்பும் பயனுடைத்தாகும். ஆதலின் கர்மத்தினின்றுந் தப்புவதற்கு இத்தகைய ஆலயநிலை ஏற்புடைத்தாகுமா? வாலறிவனது நற்றாள்களைத் தொழாது வேறெவ்வாற்றால் உயர்ச்சியடையலாகும். ஐயா ஈற்றிலே நான் கூறத்தக்கது. நீங்கள் உள் வீதியை மூன்றுமுறை வலம் வருவது நாங்கள் புறவீதியை ஒரு முறை வலம் வருவதற்குச் சரியாகாது. ஆனால், நாங்கள் வெளியை மூன்று முறை வலம் வருவது உங்களைப்போல் மும்மடங்கு வணக்கமாகும். இதுவே எங்கட்குக் கிடைக்கும் விசேஷ பயனாகும். எனவே நாங்கள் உள்ளே வரவில்லை ஆனால், புலால் உண்ணிகளும், மதுபானிகளும், வருண பேதம் பாராது பிரனில் விளைபவரும் நாங்களும் அருவருத் தொதுங்குகின்ற அழுக்குகளைத் தொட்டு நீக்குகின்ற வண்ணாரும் ஆலயத்துட் பிரவேசித்து ஆசௌசத்தை ஆக்குகின்றார்களென்பதை நினைக்க உங்கள் சித்தம் என்னகதியடையு மென்றுதான் வருந்துகின்றேன். ஆதலின் அப்படியான அநாசாரிகளை உள்ளே விடுத்துக் கோயிலைக் கெடுத்துச் சாமியைக் கலைத்து அருளைக் குலைத்துப் பொன்னே போன்ற காலத்தைக் கொன்னே கழியாது உங்களைப் போன்றாரிடை நீதி ஓங்க யாவரும் அருளைத் தாங்க வாய்க்கும் காலத்தை ஈயுமாறு சாதிபேதம் பாராது அருளை வழங்கும் கருணாசமுத்திரமாகிய சிவபெருமானை வேண்டுதும்.

ச: வித்தியாசாலை நேரமாகிறபடியாற் செல்வோம். காலம் வாய்க்கின் பின்னருஞ் சந்திக்கலாமே.

க: ஐயா நமஸ்காரம் எனக்கும் காலமாகின்றது. உங்களைப் போன்றாருடன் சம்பாஷிக்க எமக்கு மிகுவிருப்பம். பின்னரும் தருணம் வாய்க்கிற் பேசிக்கொள்ளுவோம். நமஸ்காரம்.

பத்திரிகை.

(முதலாம் பக்கத் தொடர்.)

ஒவ்வொருபிராணிகட்கும் இறக்கை ஒன்றில்லாவிடின் அவைகளின் ஜென்மம் வீணாகும். சரீர அழகு, சரீர போஷணை, சுயேச்சையாய்ச் சஞ்சரிக்கிறவைகட்கு உபகாரமாய்ச் ஜென்மம் ஈடேறும். அதுபோல, மனிதர்களுக்குக் கல்வி ஞானமாகிற இறகு இல்லாவிடின் அவர்கள் பயனற்றவராவார்கள். அவர்கட்கு அந்தக் கல்வி இறகிருந்தால் அது பற்பல விடங்களிலும் பறந்து போய் அவர்களின் புகழைப் பரப்பும். பத்திரிகைகள் இறகுகளைப்போல் அறிஞர்களின் உரைகளாகிய பற்பல சாரங்களை யெடுத்து உலகமெல்லாம் பறந்து வந்து அவர் ஆற்றலைப் பரப்பி நம்மனோர்க்கெளிமையில் உதவும்.

4. ஆயுதம் (அம்பு) இது குறித்த ஒன்றை வசப்படுத்தி யளிப்பது போலப் பத்திரிகை சீவான்மாக்களைப் பந்தித்துநிற்கும் பாசவலையை யறுத்து, சீவ சிருஷ்டியை நசியாது அஞ்ஞானப் பகையைத் தொலைத்து மெய்ஞான நிலையை வளர்த்து வரும்.

5. பத்திரம் என்பது பாதுகாப்பு சீவாதாரமான சாதனங்களாகிய இவைகட்குலக வழக்கில் வழங்கி வருகிறது. இவ்வுலக வாழ்க்கைக்குள் எவ்வளவு கவனமிருக்கிறதோ அதுபோல் இகபர மிரண்டிற்கும் ஒத்தாசை செய்யும் பத்திரிகைகளை மேற்போக்காகப் பார்த்துவிடாமல் பாது காக்க வேணும்.

முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்
மொழியும் பொன்னேபோற் போற்றுவாம்.

என்று நன்னூலாரும், ஆகலின் பத்திரிகைகளைப் பாது காக்கவேணும் என்பதைப் பற்றிப் பத்திரம் என்ற சொல் விளங்கி நிற்கிறது.

6. என்னுடு முன்னேறிப் பொன்னுடென விளங்குமோ அந்நாட்டில் முன்னிற்பது கல்வியென்பதை எவரும் மறக்கார்கள். கல்வி பின்நிற்குமோ அவ்வளவு நாடுகள் தாழ்மையடையும் என்பது உண்மை. இதைப்பற்றி நமது திராவிடனின் உண்மையை விளக்கிக் காட்டியிருக்கிறது.

7. என்றைக்குச் சனங்கள் கல்விமான்களாவது? நாடு முன்னுக்கு வருவது? என்று வினவலாம். கல்வி பயிலாவிடிலும் கேள்விப் பயிற்சியாவது வேண்டும்.

"கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றுந் துணை"

என்று நாயனார் கூறியுளர். எவையுங் கேட்டறியவேண்டு மென்பது சிந்திக்கற்பாலது.

8. இவைகட்கெல்லாம் எந்தச்சாஸ்திரங்கற்க வேணுமென்றால் இத்தியாதி குறைகளை நிவிர்த்திக்கவும், பலவிதமான உலக ஞானங்களைப் போதிக்கவும், பண்டைய நான் தொடங்கி இந்நான் வரையுமுள்ள ஆன்மார்த்த ஞானங்களை விளக்கிவரும் ஒரு நூல் உண்டு. அதுதான் பத்திரிகை. பத்திரிகையின் சஞ்சிகைகளை அபிவிருத்தி செய்வது நம்நாட்டின் முதற்கடமையாகும். பத்திரிகைகளுக்கு வியாசம் எழுதுவோர் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய சில விஷயங்களைப்பற்றிக் கவனிப்போம்.

தமிழ்மக்களின் கல்வி, அறிவு, ஒற்றுமை, நாகரீகம், பக்தி, முன்னேற்றம் முதலிய பலமேலான விஷயங்களைக் கருதி யுலாவிவரும் ஏனைய பத்திரிகைகளுள் திராவிடனே முதன்மை பெற்றவனென்பது அவனோடு பழகிவரும் நேயர்கள் நன்கறிவார்கள். எனினும் சந்தாநேயர்களிற் சிலர் தாம் பிரயாசத்தோடு எழுதியனுப்பும் வியாசங்களைப் பிரசுரிக்கவில்லையென்று சொல்வதையறிந்து எனக்குத்தெரிந்த வரையில் சில சமாதானங்களைக் கீழ் வரையலானேன்.

1 ஒருவர் தாம் எழுதும் வியாசம் பத்திரிகையின் நோக்கம் கொள்கை முதலியவற்றை அனுசரித்ததாக யிருக்கிறதா வென்பதைக் கவனிக்க வேண்டும்.

2 கீழ்க் குறித்தவைகள் விருத்தியாகும் வண்ணம் அவைகளிலேதேனும் ஒன்றைப் பற்றியிருத்தல் வேண்டும். (1) தேசாபிமானம், (2) பாஷாபிமானம், (3) ஆசாரம், (4) ஒழுக்கம், (5) கல்வி, (6) சாஸ்திரப் பயிற்சி, (7) வியாபாரம், (8) சகோதரவுணர்ச்சி, (9) ஒற்றுமை, (10) நன்னடை, (11) தொழில், (12) அறிவு, (13) செல்வம் (14) முன்னேற்றம், (15) மாதா பிதா குரு பக்தி, (16) தெய்வ பக்தி, (17) தர்மம், (18) நீதிமொழிகள் (19) சன்மார்க்க விஷய நாவல்கள், (20) இயற்கை நூதனம், புதினங்கள் முதலியனவாகும்.

3 ஒவ்வொருவரும் தம் மத சத்விஷயங்களை வெளியிடுவதில் பிற மதங்களில் அதற்கொவ்விய விஷயங்களை மேற்கோள்களாகவும், உதவியாகவும் எடுத்துக் கூறலாம்.

4 எழுதும் வியாசம் பெரும்பான்மையோர்க்கனுகூல முடையதாக இருத்தல் வேண்டும்.

5 முன் ஒரு தடவை ஒருவரால் கூறாததாகயிருத்தல் வேண்டும்.

6 அச்சுவேலையாட்களுக்குக் கஷ்டமின்றித் தெளிவாகவும் சுத்தமாகவு மிருத்தல் வேண்டும்.

7. எத்தனையோ காரணங்களில் ஒன்றைக் கருதி ஒரு வியாசம் பிரசுரிக்காது விடலாகும். அதற்காக ஆயாசமடைவதும் பத்திராசிரியரைக் காரணங்கேட்டு வீண் சிரமமுண்டாக்குவது கற்றறிந்தோர்க்குத் தகுதியாகாது.

மேற் கூறிய விஷயங்களைக் கவனித்து எழுதி அனுப்பும் வியாசங்களைப் பிரசுரிக்க எவரும் மறுக்கமாட்டார்கள் என்பது என் துணிபாதலால் மற்றும் நேயர்கள் அவ்வாறே செய்யும்படி பிரார்த்திக்கின்றேன்.

S N. சர்மா
சித்தங்கேணி.

விசேஷ அறிவிப்பு.

பியானோ, லில்லிபுளூட், பிடில், ஆர்மோனியம், கிறுமபோன் முதலிய சகல வாத்தியங்களும், கடிகாரங்களும் திருத்திக்கொடுக்கப்படும். மேற்கூறிய கருவிகளுக்குத்தேவையான எந்தச் சாமான்களும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

கே. எஸ். இரத்தினம்
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

ஓறியன்றல் ஸ்ரோர்ஸ்.

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எங்களுடைய இதரவியாபாரங்களுடன், பலபேர் வேண்டுகோளின்படி வீட்டிற்கு வேண்டிய கதிரைகள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிகள், பொதுவாக வீட்டிற்கு வேண்டிய எல்லாவித மரச்சாமான்களும், எங்களுடைய மாதிரிகளைக் கொண்டு திறமான தச்சர்களால் கொழும்பில் செய்வித்து யாவரும் விரும்பும்படியாயும் யாவரும் வாங்குவதற்கேற்ற விலைகளில் விற்கின்றோம். ஒருமுறை வந்து பாருங்கள்.

வ. அ. துரையப்பா,
சொந்தக்காரர்.

யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ்.

(பொன்னுச்சாமி ஷாப்)

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

பட்டினத்திற்குச் சாமான் வாங்க வந்தால் பிற கடைகளின் விலைகளை அறிந்திருந்தாலும், எங்கள் ஷாப்பின் விலைகளையும் சாமான்களையும் ஒத்துப்பார்த்து வாங்கவும்.

பலவிதமான வேஷ்டிகள் சால்வைகள் ஷர்ட்டிங்கள் மற்றுமுள்ள எல்லா ஷாப்புச் சாமான்களும் நேரிலும் பிரத்தியேகமான ஏஜண்டுகள் மூலமாகவும் வரவழைத்து விற்கின்றோம்.

டாக்குத்தர்களால் குறிக்கப்பட்ட எல்லாவித மருந்துவகைகளும், எங்கள் மருந்து ஷாப்புப் பிரிவில், நற்சாட்சிப் பத்திரம்பெற்ற ஆட்களைக் கொண்டு, விலைசரசமாயும் சுணக்கமின்றியும் தயாரித்துக் கொடுக்கப்படும் எல்லாப் பேட்டன்ட் மருந்துகளும் கிடைக்கும்.

Dr. S. Ponnusamy,
Proprietor & Manager.

Published by V. M Kandiah for and on behalf of the Jaffna Depressed Classes Association Chunnagam & printed at the Saiva Prakasa Press, Vannarponnai.

V. M. Kandiah
Chunnagam